කර්මාන්ත හා වාණිජ කටයුතු අමාත්‍යාංශය
கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு
Ministry of Industry and Commerce

පරන්තන් කෙමිකල්ස් කම්පැනි ලිමිටඩ්
பரந்தன் கெமிக்கல்ஸ் கம்பனி லிமிடெட்
Paranthan Chemicals Company Limited

වාර්ෂික වාර්තාව
வருடாந்த அறிக்கை
Annual Report

2019

கைத்தொழில் மற்றும் வாணிப
அலுவல்கள் அமைச்சு

பரந்தன் கெமிகல்ஸ் கம்பனி லிமிடட்

ஆண்டறிக்கை 2019

உள்ளடக்கம்

1	கம்பனியின் பின்னணி
2	உள்நாட்டு இரசாயன சந்தை மற்றும் அதன் சவால்கள்
3	கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள்
4	கம்பனியின் நோக்கு, செயற்பணி, இலக்கு மற்றும் நோக்கங்கள்
5	தகைமைவாய்ந்த அதிகாரியின் மீளாய்வு
6	பொது முகாமையாளரின் மீளாய்வு
8	2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான பணிப்பாளர் சபையின் அறிக்கை
12	2019 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ள எதிர்பார்க்கப்பட்ட நடுத்தரகால நடவடிக்கைகள்
13	பரந்தன் கெமிகல்ஸ் கம்பனி லிமிடட்டின் பங்குரிமையாளர்களுக்கான கணக்காய்வாளரின் அறிக்கை
19	2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று
20	2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைமைக் கூற்று
21	2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான உரிமையாண்மை மாற்றம் பற்றிய கூற்று
22	2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று
24	2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்
31	2019 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான கணக்குகளுக்கான குறிப்புக்கள்
38	நிறுவன ஒழுங்கமைப்பு – உபாயமுறையிலான வியாபார அலகு
39	நிறுவன ஒழுங்கமைப்பு
40	2018, 2019 ஆம் ஆண்டுகளுக்கான செயற்பாட்டு மற்றும் நிதிசார் தரவுகள் மற்றும் 2020 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட தகவல்கள்
41	கம்பனியின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்தல்
42	நிறுவனம்சார் நல்லாட்சி
45	கணக்காய்வுக் குழுவின் அறிக்கை
46	2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான பிரதான நிதிசார் சந்தர்ப்பங்களை உள்ளடக்கிய ஐந்து வருட பொழிப்பு
47	கூட்டங்கள் பற்றிய அறிவித்தல்

கம்பனியின் பின்னணி

பரந்தன் கெமிகல்ஸ் இரசாயனக் கம்பனி அரச வளங்கள் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் முழுமையாக அரசுக்கு உரித்தான கம்பனியொன்றாக உள்ளதுடன், உள்நாட்டுக் கைத்தொழில்களுக்குத் தேவையான பிரதான இரசாயனப் பதார்த்தங்களான திரவ குளோரின், கோஸ்ரிக் சோடா மற்றும் ஹைட்ரோகுளோலிக் அமிலத்தை இறக்குமதி செய்து சந்தைக்கு விநியோகிப்பது மேற்கொள்ளப்படுகின்றது. திரவ குளோரின் சந்தையின் பிரதான வழங்குநராக உள்ள பரந்தன் கெமிகல்ஸ் கம்பனி ஏனைய இரசாயன பதார்த்தங்களுக்கும் குறிப்பிடத்தக்களவு பகுதிக்கு உரித்துக் கூறுகின்றது.

1950 ஆம் தசாப்த காலத்தில் வட மாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தில் பரந்தனில் அமைந்துள்ள அரசாங்க தொழில்சாலையாக ஆரம்பித்து வைக்கப்பட்ட பரந்தன் கெமிகல்ஸ் தொழில்சாலை 1957 ஆம் ஆண்டு பரந்தரன் கெமிகல்ஸ் கூட்டுத்தாபனம் எனத் தாபிக்கப்பட்டது. 1957 இன் 49 ஆம் இலக்க கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் ஆரம்பத்தில் இத்தொழில்சாலை மூலம் உள்நாட்டு உப்பு மூலப் பொருளாகப் பயன்படுத்தப்பட்டு கோஸ்ரிக் சோடா, திரவ குளோரின், ஹைட்ரோக்குளோரிக் அமிலம் பிரதானமாகவும், சின்க் குளோரையிட், பெரிக் குளோரைட் மற்றும் மேசை உப்பு துணை உற்பத்தியாகவும் சந்தைக்கு வழங்கப்பட்டன. 1985 ஆம் ஆண்டு பயங்கரவாத நடவடிக்கைகள் காரணமாக பரந்தன் கெமிகல்ஸ் தொழில்சாலையின் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதுடன், உள்நாட்டுக் கைத்தொழில்களுக்கு அதாவது நீர் சுத்திகரிப்புக்கு, சவர்க்காரம் உற்பத்திக்குத் தேவையான இராசாயனப் பதார்த்தங்களை இறக்குமதி செய்து வழங்க வேண்டி ஏற்பட்டது. தொழில்சாலையை மூட வேண்டி ஏற்பட்டதன் மூலம் அந்நியச் செலாவணி பாரியளவில் நாட்டை விட்டு வெளியேறியதுடன் பாரியளவில் தொழில்வாய்ப்புக்களையும் நாடு இழந்தது.

தற்போது இயங்கிவருகின்ற பரந்தன் கெமிகல்ஸ் கம்பனி 1987 இன் 23 ஆம் இலக்க அரசாங்க கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசுக்கு உரித்தான தொழில்முயற்சிகளை அரச கம்பனிகளாக மாற்றியமைக்கும் பொதுக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் 1991 சனவரி 17 ஆம் திகதி தாபிக்கப்பட்டது. அரசாங்கத்திற்கு உரித்தான கம்பனியொன்றான பரந்தன் கெமிகல்ஸ் கம்பனி 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள் பதிவு செய்யப்பட்டதுடன், கம்பனிகள் சட்டத்தின் மூலம் விதித்துரைக்கப்பட்டுள்ள நல்லாட்சிக் கொள்கைகள் மற்றும் அரசாங்கத்தினால் விதித்துரைக்கப்பட்டுள்ள கொள்கைகளுக்கு அமைய நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றது.

கம்பனி உள்நாட்டுச் சந்தைக்குத் தேவையான திரவ குளோரின் கிலோ கிறாம் 900 சிலிண்டர்களை இறக்குமதி செய்வதுடன், இதில் ஒரு பகுதி கிலோ கிறாம் 68 சிலிண்டர்களுக்கு நிரப்புவதை நிறுவனத்தின் மீள் நிரப்பும் பிரிவு மேற்கொள்கின்றது. தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் ஒரு சில நிலையங்கள் மற்றும் ஒரு சில சிறியளவிலான வாடிக்கையாளர்களுக்கு சிறு சிலிண்டர்களும் வழங்கப்படுவதுடன், அதன் மூலம் சிறியளவிலான கைத்தொழிலாளர்களுக்கு பாரிய சேவையை கம்பனியூடாக மேற்கொள்ள முடிந்துள்ளது.

இறக்குமதி செய்யப்படுகின்ற சகல சிலிண்டர்களும் சர்வதேச தரப் பரிசோதனைகளுக்கு உட்பட்டதாக பயன்படுத்தப்படுவதுடன், உள்நாட்டு மீள் நிரப்பல் நடவடிக்கைகள் சர்வதேச தரநியமங்களுக்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றன. நாட்டின் குளோரின் துறையின் நிபுணத்துவ அறிவைக் கொண்டுள்ள பதவியணி கம்பனியிடம் உள்ளதுடன் தற்போது நீர் வழங்கல்சபையின் குளோரின் உபயோகம் தொடர்பில் அலுவலர்களை பயிற்றுவிக்கும் நடவடிக்கைகளும் நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

கம்பனியின் தலைமை அலுவலகம் மற்றும் களஞ்சியம் இலக்கம் 100/25 ஸ்ரீ ராமநாதன் மாவத்தையில் பேணிவரப்படுவதுடன், பரந்தனில் அமைந்துள்ள 227 ஏக்கர் காணிப்பகுதி புதிய தொழில்சாலையொன்றை நிர்மாணிக்கவென ஒதுக்கப்பட்டுள்ளது. களுத்துறை நாகொட கைத்தொழில் பேட்டையில் அமைந்துள்ள 2 1/2 ஏக்கர் காணிப்பகுதி குளோரின் மீள் நிரப்பல் நடவடிக்கைகளை நிருவகிப்பதற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி நிறுவனத்தின் ஒட்டுமொத்த பதவியணி 64 ஆக காணப்பட்டது. கம்பனி கடந்த சில வருட காலமாக அரசாங்கத்திற்குச் செலுத்த வேண்டிய சகல வரிகளையும் செலுத்திய பின்னர் இலாபத்தில் தொடர்ச்சியான வளர்ச்சியை வெளிப்படுத்தியுள்ளது.

உள்நாட்டு இரசாயன சந்தையும், அதன் சவால்களும்

இலங்கையின் இரசாயன சந்தை முக்கியமாக பல பிரிவுகளை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது.

- விவசாய இரசாயனம்
- கைத்தொழில்களுக்குத் தேவையான இரசாயனம்
- இறப்பர் கைத்தொழிலுக்குத் தேவையான இரசாயனம்
- வர்ணப்பூச்சு உற்பத்திக்குத் தேவையான இரசாயனம்
- பிளாஸ்ரிக் சார்ந்த கைத்தொழில்களுக்குத் தேவையான இரசாயனம்
- உணவு மற்றும் விதை உற்பத்திக்குத் தேவையான இரசாயனம்
- ஆட்களின் உபயோகத்திற்குத் தேவையான இரசாயனம்

ஒரு நாடு என்ற வகையில் இலங்கை பாரியளவில் இரசாயனப் பதார்த்தங்களை நுகர்வதுடன் மேற்படி மொத்த அளவும் வருடாந்தம் இறக்குமதி செய்யப்படுகின்றது.

பரந்தன் கெமிகல்ஸ் கம்பனி பிரதானமாக நீர் சுத்திகரிப்பு, இரசாயன மற்றும் இறப்பர் மற்றும் குளிரூட்டி அறைகள் போன்ற பல்வேறு கைத்தொழில்களுக்குத் தேவையான இரசாயன சந்தை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

பரந்தன் கெமிகல்ஸ் கம்பனியின் விற்பனைகள் தொடர்பில் இலங்கையின் ஒட்டுமொத்த சந்தைப் பெறுமதி ஒரு வருடத்திற்கு சுமார் ரூபா பில்லியன் 1.60 ஆகும் என கணக்கிடப்பட்டுள்ளது. மொத்த சந்தையில் பரந்தன் கெமிகல்ஸ் கம்பனி கொண்டுள்ள பங்களிப்பை அதிகரிப்பதற்கு தற்போது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அடுத்துவரும் 5 வருடங்களில் சந்தையின் முன்னோடியாவது எமது எதிர்பார்ப்பாகும்.

பரந்தன் கெமிகல்ஸ் கம்பனி 100] அரசுக்கு சொந்தமான நியாயாதிக்க நிறுவனமொன்றாகும் என்பதுடன், நிறுவனத்தின் எதிர்கால நோக்கங்களை கம்பனியின் கூட்டுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அடைந்துகொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள்

சட்டரீதியான அந்தஸ்து	:	1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்பைக் கொண்ட பொதுக் கம்பனியாக பதிவு செய்து 1991 இல் தாபிக்கப்பட்டதை அடுத்து 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் மீள் பதிவு செய்யப்பட்டுள்ளது. பொதுக் கம்பனியாக மாற்றியமைப்பது பொது தொழில்முயற்சி அல்லது அரசுக்கு உரித்தான தொழில்முயற்சிகளை பொதுக் கம்பனிகளாக மாற்றியமைக்கு 1987 இன் 23 ஆம் இலக்க சட்டத்திற்கு அமைய மேற்கொள்ளப்பட்டுள்ளது. பரந்தன் கெமிகல்ஸ் கம்பனிக்கு உரித்தானதாகக் காணப்பட்ட தத்துவம் மற்றும் செயற்பாடுகள் கூட்டணைக்கப்பட்ட தத்துவம் கூட்டிணைக்கும் செயன்முறையின் மூலம் மீண்டும் பரந்தன் கெமிகல்ஸ் கம்பனிக்கு சாட்டுதல் செய்யப்பட்டது.
கூட்டிணைக்கப்பட்ட திகதி	:	1957 இல் தாபிக்கப்பட்டதுடன் 1991 சனவரி 17 ஆம் திகதி மீளத் தாபிக்கப்பட்டது.
தலைமை அலுவலகத்தின் முகவரி	:	100$25" ஸ்ரீ ராமநாதன் மாவத்தை, கொழும்பு 13, இலங்கை
கைத்தொழில் பிரிவு	:	BOI வலயம், வகவத்தை, ஹொரனை.
தொ.பே. இல. தலைமை அலுவலகம்	:	+94 11 2437555-6-7; +94 11 2437831; +94 11 2387109; +94 11 2324464; +94 11 2324465; +94 11 2437829
தொ.பே. இல. களுத்துறை பிரிவு	:	+94 34 2289976
தொ.பே. இல. ஹொரனை பிரிவு	:	+94 34 3442924
பெக்ஸ்	:	+94 11 2437555
மின்னஞ்சல் முகவரி	:	pccltd@sltnet.lk
இணையத்தளம்	:	www.paranthanchemicals.gov.lk
பிரதான வங்கியாளர்கள்	:	மக்கள் வங்கி, இலங்கை வங்கி, சம்பத் வங்கி
நியாயாதிக்க கணக்காய்வாளர்கள்	:	கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
தகைமைவாய்ந்த அதிகாரி	:	திரு எரிக் இளயப்பஆரச்சி (2015 சனவரி 25 நியமனம் செய்யப்பட்டார்)
பணிப்பாளர் சபை செயலாளர்	:	திரு எச்.எல். விபுல சில்வா
பிரதம அலுவலர்கள்	:	பொது முகாமையாளர் - திருமதி டபிள்யு.டி. கீர்த்திலதா (2019 யூலை 09 ஆம் திகதி ஓய்வுபெற்றார்) பொது முகாமையாளர் - திரு ஜி.ஏ.ஜே. விஜேசுந்தர (2019 யூலை 10 ஆம் திகதி நியமனம் செய்யப்பட்டார்) பிரதிப் பொது முகாமையாளர் - திரு டி.எம்.ரி.எஸ். திசாநாயக்க பிரதிப் பொது முகாமையாளர் (பொறியியல்) - திரு திஸ்ஸ லியனகே
உள்ளகக் கணக்காய்வாளர்	:	திலக் ஜயதிலக்க மற்றும் பட்டயம் பெற்ற கணக்காளர்களின் கம்பனி (நியமனத் திகதி 2016 சனவரி 01)

கம்பனியின் நோக்கு, செயற்பணி, இலக்கு மற்றும் நோக்கங்கள்

நோக்கு

இலங்கையின் இரசாயன உற்பத்திகள் மற்றும் சந்தையின் முன்னோடி என்ற வகையிலும், அரச அனுசரணையுடன் சந்தையை ஒழுங்குறுத்துபவராகவும் எதிர்காலத்தில் சந்தையில் நிலைபெறுதல்.

செயற்பணி

கைத்தொழில்களுக்குத் தேவையான தரத்தைக் கொண்டதாக உயர் தர இரசாயன வழங்கலை நாட்டில் உற்பத்தி செய்து அல்லது இறக்குமதி செய்து வழங்குவதன் மூலம் உள்நாட்டு இரசாயனக் கைத்தொழில்களின் தரத்தை மேம்படுத்த பங்களிப்புச் செய்தல்.

இலக்கு

- இலங்கையின் இரசாயன சந்தையின் முன்னோடியாதல்
- பரந்தனில் கோஸ்ரிக் சோடா மற்றும் குளோரின் தொழில்சாலையை மீள இயங்கச் செய்தல்.
- பிளீசின் பவுடர் மற்றும் சல்பியூரிக் அமிலம் போன்றவற்றை உற்பத்தி செய்யத் தேவையான அலகுகளை தாபித்தல்.
- ஊழியர் திருப்தியை மேம்படுத்துவதை உறுதி செய்தல் மற்றும் அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் உச்சளவான சேவையை கம்பனிக்குப் பெற்றுக் கொள்ளல்.
- நிறுவனத்தினுள் காணப்படுகின்ற பௌதீக வளங்களின் பற்றாக்குறைகளைத் தவிர்த்துக் கொள்ளல்.

நிறுவனத்தின் நோக்கங்கள்

கம்பனியின் யாப்புக்கு அமைய கம்பனியின் பிரதான நோக்கங்கள் பின்வருமாறாகும்.

பிரதான நோக்கங்கள்

“1955 இன் 19 ஆம் இலக்க சட்டத்தின் அரச கூட்டுத்தாபனங்களுக்கான பிரிவு மற்றும் 1956 மார்ச் மாதம் 01 ஆம் திகதி பிரகடனம் செய்யப்பட்ட 10898 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகை மற்றும் பின்னர் திருத்தம் செய்யப்பட்டு சமர்ப்பிக்கப்பட்ட 1957 இன் 49 ஆம் இலக்க அரசாங்க கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் 2 ஆம் பிரிவுக்கு அமைய மற்றும் 1959 சனவரி 01 ஆம் திகதி பிரகடனம் செய்யப்பட்ட வர்த்தமானப் பத்திரிகை இலக்கம் 11,632 இற்கமைய கூட்டிணைக்கப்பட்ட பரந்தன் கெமிகல்ஸ் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் மற்றும் பேணிவருவதற்கு,

அ. பரந்தரன் கெமிகல்ஸ் கூட்டுத்தாபனத்தின் சகல அசையும் மற்றும் அசையாத சொத்துக்களினதும் உரித்தைக் கொண்டிருத்தல்.
ஆ. பரந்தரன் கெமிகல்ஸ் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தானதாகக் காணப்பட்ட சகல சொத்துக்களினதும் தொடர்ச்சியான உரித்து, தத்துவ அதிகாரம், சிறப்புரிமைகள் மற்றும் சொத்துக்களிலிருந்து எழும் உரிமைகளின் உரித்தைக் கொண்டிருத்தல்.
இ. பரந்தரன் கெமிகல்ஸ் கூட்டுத்தாபனத்தின் சகல பொறுப்புக்களையும் கொண்டிருத்தல்.
ஈ. பரந்தரன் கெமிகல்ஸ் கூட்டுத்தாபனத்தின் கணக்குகளை பொறுப்பேற்றல், பேணிவருதல் மற்றும் வியாபாரம் தொடர்பான ஆவணங்களை வழிப்படுத்தல்.
உ. பரந்தரன் கெமிகல்ஸ் கூட்டுத்தாபனத்தின் சகல ஒப்பந்தங்கள் மற்றும் வியாபார நடவடிக்கைகளுக்காகவும் செய்துகொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கைகளுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்ளல்.
ஊ. பரந்தரன் கெமிகல்ஸ் கூட்டுத்தாபனத்தினால் பேணிவரப்பட்ட சட்ட நடவடிக்கைகளை பேணிவருதல்.
எ. இலங்கையில் அமுலில் உள்ள சட்டங்கள், விதிகளுக்கு அமைய ஊழியர்களுக்கு கம்பனியின் பங்குகளை கொள்வனவு செய்வதற்கான பங்குகளின் பொறுப்பை தாபித்தல்.

வியாபார நடவடிக்கைகளை பேணிவருதல்:

i. கோஸ்ரிக் சோடா, குளோரின், சல்பியூரிக் அமிலம், உரம், பூஞ்சைக் கொல்லிகள், பூச்சுக் கொல்லிகள் போன்ற பதார்த்தங்களை மேலே குறிப்பிடப்பட்டுள்ள விவசாய இரசாயனப் பதார்த்தங்கள், சுத்தம்செய்யும் பதார்த்தங்கள் மற்றும் வேறு இரசாயன பதார்த்தங்களை உற்பத்தி செய்வதும், விற்பனை செய்வதும்,
ii. மேலே குறிப்பிடப்பட்டுள்ள உற்பத்திச் செயன்முறைகளின் போது உற்பத்தி செய்யப்படும் ஹைட்ரோக்குளோரிக் அமிலம், சின்க் குளோரைட், பெரிக் குளோரைட் மற்றும் மேசை உப்பு போன்ற எந்தவொரு உப உற்பத்தியையும் அபிவிருத்தி செய்தல், உற்பத்தி செய்தல் மற்றும் விற்பனை செய்தல்.
iii. மேலே குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு உற்பத்தியையும் இறக்குமதி செய்வதும், விற்பனை செய்வதும்.
iv. இரசாயன பதார்த்தங்களின் உற்பத்தி, மொத்த வியாபாரம் மற்றும் சில்லறை வியாபாரம், இருப்புக்களைப் பேணிவருதல், பகுப்பாய்வு இரசாயனம், உலர் உப்பு உற்பத்தி, எண்ணெய் மற்றும் வர்ணமூட்டல், இறக்குமதி மற்றும் ஏற்றுமதி, பிளாஸ்ரிக் உற்பத்தி மற்றும் வியாபாரம், சிந்தடிக் மற்றும் பைபர் பாரிய மற்றும் சிறு இரசாயனங்கள், மருந்து, பழச்சாறு, அமிலம், இரசாயனப் பதார்த்தங்கள், கைத்தொழில் மற்றும் வேறு தயாரிப்புக்கள், கனியம் மற்றும் நீர், வெடிபொருட்கள், வெடி மருந்துகள், உற்பத்தி மற்றும் சகல வகையிலுமான உதிரிபாகங்கள், பூச்சு மருந்து, பூஞ்சைக் கொல்லி, சீமேந்து, வர்ணம், வார்னிஷ், மருந்து, சகல வகையிலுமான மின்சாரம், இரசாயனம், புகைப்படம்பிடித்தல், சத்திரசிகிச்சை மற்றும் விஞ்ஞான உபகரணங்கள் மற்றும் சமமான பொருட்கள் அல்லது சம்பந்தப்பட்ட வியாபாரங்கள் போன்ற மேலே குறிப்பிடப்பட்ட வியாபாரங்களில் ஈடுபடுதல்.

இன்றைய கம்பனியின் செயற்பணி

திரவ குளோரின், கோஸ்ரிக் சோடா மற்றும் ஹைட்ரோகுளோரிக் அமிலம் போன்றவற்றை இறக்குமதி செய்வதும், விற்பனை செய்வதும் பரந்தன் கெமிகல்ஸ் கம்பனியின் இன்றைய பிரதான செயன்முறையாகும்.

தகைமைவாய்ந்த அதிகாரியின் மீளாய்வு

பரந்தன் கெமிகல்ஸ் கம்பனி லிமிடட் நிறுவனம் கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கிவருகின்ற அரசுக்கு உரித்தான இலாபம் உழைக்கும் கம்பனியொன்றாகும். இரசாயன உற்பத்தி, இறக்குமதி மற்றும் விநியோகம் தொடர்பில் தொழில்சார் ரீதியாக முகாமைத்துவம் செய்யப்பட்டதொரு தொழில்முயற்சி என்ற வகையில், நீர் சுத்திகரிப்பு மற்றும் உள்நாட்டு கைத்தொழில்களுக்குத் தேவையான இரசாயன பதார்த்தங்களை பெற்றுக் கொள்வதை உறுதி செய்வதில் கம்பனி முக்கிய செயற்பணியொன்றை ஆற்றிவருகின்றது. கம்பனியின் பிரதான நோக்கக்கங்களில் பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான தேசத்தைக் கட்டியெழுப்புவது மற்றும் ஆரம்ப இரசாயன பிரிவில் அரசாங்கத்தின் செயல்ரீதியான நிலைத்திருத்தலை உறுதி செய்தல் மற்றும் இரசாயன கைத்தொழிலில் இரசாயன பதார்த்தங்களை வழிப்படுத்துவதில் செயல் ரீதியான பங்களிப்பை வழங்குவதும் உள்ளடங்கும்.

தற்போது இக்கம்பனி லிமிடட் திரவ குளோரின் சந்தையின் பிரதான வழங்குநராக உள்ளதுடன், ஏனைய இரசாயனப் பதார்த்தங்களிலும் நியாயமான சந்தைப் பங்கையும் அடைந்துகொண்டுள்ளது. உள்நாட்டு உப்பு உற்பத்திக்கு பெறுமதி சேர்க்கும் கொஸ்ரிக் சோடா செதில்கள், திரவக் குளோரின் மற்றும் அதுசார்ந்த வேறு இரசாயன பதார்த்தங்களை உற்பத்தி செய்யும் வரலாற்றைக் கொண்டுள்ள கம்பனி என்ற வகையில் பரந்தன் கெமிகல்ஸ் கம்பனி பரந்தன் பிரதேசத்தில் தொழில்சாலையை மீளத் தாபிக்க எதிர்பார்க்கின்றது.

தொழில்சாலையை மீளத் தாபிக்கும் போது அது இன்றைய சூழல் கொள்கைகளில் நிலைபேறான தன்மையை உறுதி செய்தல் வேண்டும். பரந்தன் கம்பனி பெற்றுக் கொண்டுள்ள ஒட்டுமொத்த முகாமைத்துவ திறமைகள் மற்றும் பொறியியல் அனுபவங்கள் மற்றும் அதன் வர்த்தகக் குறியீட்டின் பெயரால் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ள நன்மதிப்பு எதிர்கால கருத்திட்டங்களுக்கு அடித்தளமாக அமையும்.

கம்பனியை இலாபம் பெறும் நிலையில் பேணிவருவதுடன், சம்பளங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் உட்பட சகல செலவினங்களும் அதன் நிதியத்திலிருந்து செலுத்தப்படுகின்றது என்பதைக் குறிப்பிடுவது மிக முக்கியமான விடயமாகும். கம்பனி வருடாந்தம் பொதுத் திறைசேரிக்கு பங்கிலாபம் செலுத்துகின்றது. மேலும் பதவியணியினரின் உபயோகத்திற்காக பரந்தளவிலான மருத்துவ சுகாதார காப்புறுதித் திட்டமும் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டில் கம்பனி மேற்கொண்ட முக்கிய பணிகள் பற்றிய பல தகவல்கள் 2019 இன் ஆண்டறிக்கையில் உள்ளடங்குகின்றன. இது மென்மேலும் அபிவிருத்தியை அடைந்துகொள்வதற்கு கம்பனியின் ஆற்றல்கள் மற்றும் தற்போது காணப்படுகின்ற சவால்களுக்கு முகம்கொடுக்க பலம்சேர்க்கும்.

நன்றி நவிலல்

எனது கடமை நடவடிக்கைகள் மற்றும் பொறுப்புக்களை நிறைவேற்றும் போது, கம்பனிக்கும், எனக்கும் வழங்கிய பெரும் ஒத்துழைப்புக்காக மேன்மைதங்கிய சனாதிபதி அவர்களுக்கும், கௌரவ அமைச்சருக்கும், அமைச்சின் செயலாளருக்கும், கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கும், திறைசேரியின் செயலாளருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

வெளிக் கணக்காய்வாளர்களான ரன்வத்த என்ட் கம்பனிக்கும், உள்ளகக் கணக்காய்வாளர்களான திரு கே. லியனகே என்ட் கம்பனிக்கும், பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்கும், சிரேஷ்ட முகாமையாளர்களுக்கும், கம்பனியின் சகல பதவியணியினருக்கும், ஊழியர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவிப்பது, கம்பனியின் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக பேணிவருவதற்கு அவர்கள் வழங்கிய அயராத முயற்சிகள் மற்றும் அர்ப்பணிப்புக்காகவாகும்.

எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களின் அனுசரணை இன்றி கம்பனியைப் பேணிவர முடியாது என்பதையும் இங்கு வலியுறுத்த விரும்புகின்றேன். அவர்கள் அனைவரும் நேரடியாகவும், மறைமுகவமாகவும் வழங்கிய ஒத்துழைப்பை நன்றியுடன் நினைவு கூர்வதுடன், 2020 ஆம் ஆண்டிலும் கம்பனியின் நிலைத்திருத்தலுக்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பையும், சேவையையும் எதிர்பார்க்கின்றேன்.

எரிக் இளயப்பஆரச்சி,
தகைமைவாய்ந்த அதிகாரி,
பரந்தன் கெமிகல்ஸ் கம்பனி லிமிடட்
2020 யூன் மாதம் 15 ஆம் திகதி

பொது முகாமையாளரின் மீளாய்வு

2019 இல் கம்பனியின் பிரதான செயற்பாடுகள் மற்றும் வருமான வழிமுறை குளோரின் (Chlorine)" கோஸ்ரிக் சோடா (Caustic Soda& மற்றும் ஹைட்ரோகுளோரிக் அமிலம் (Hydrochloric Acid) ஆகிய பொருட்களை விற்பனை செய்வதற்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. மீளாய்வுக்கு உட்பட்ட ஆண்டில் கம்பனியின் புரள்வு ரூ.மி. 287 ஆகும். இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 7'47] ஆன அதிகரிப்பாகும். எனினும் கம்பனி பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்த பங்கிலாபம் வரிக்கு முன்னர் ரூ.மி. 73 ஆகும் என்பதுடன், இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சிறிதளவு குறைவடைந்துள்ளது. கம்பனியின் நிலையான வைப்புக்களுக்கு கிடைத்த வட்டி விகிதம் வீழ்ச்சியடைந்தமை இதற்கான காரணமாகும்.

இந்த ஆண்டிலும் கம்பனியின் ஒட்டுமொத்த வருமானத்தின் கூடுதலான பங்கினை திரவக் குளோரின் விற்பனை மூலம் பெற்றுக் கொள்ள முடிந்ததுடன், கோஸ்ரிக் சோடா மற்றும் ஹைட்ரோகுளோரிக் அமிலம் விற்பனை மூலம் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. சந்தையில் இந்த இரசாயனப் பதார்த்தங்கள் குறைந்த விலையில் கொள்வனவு செய்ய முடிந்தமை காரணமாக ஏற்பட்ட போட்டித்தன்மை இந்தப் பின்னடைவுக்குக் காரணமாக அமைந்தது.

களுத்துறை குளோரின் மீள் நிரப்பல் அலகில் 2012 ஏப்ரல் 20 ஆம் திகதி இடம்பெற்ற குளோரின் கசிவு காரணமாக புதிய உற்பத்திகளை ஆரம்பிக்க கம்பனிக்கு முடியவில்லை. இதன் காரணமாக குளோரின் மீள் நிரப்பல் நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்கப் போதியளவு இடவசதிகளைக் கொண்ட காணியொன்றைத் தேடிப் பெற்றுக் கொள்வது நிறுவனத்திற்கு பெரும் சவாலாக அமைந்தது. எனவே முன்னர் திட்டமிட்டிருந்தவாறு புதிய உற்பதியான பிளீசின் திரவம் (Bleaching Liquid) மற்றும் பிளீசின் தூள் (Bleaching Powder) உற்பத்தி செய்வதை ஆரம்பிக்க முடியவில்லை. ஹொரனையில் அமைந்துள்ள தனியார் ஒப்பந்ததாரர் ஒருவரின் வளவில் பிளீசின் திரவம் உற்பத்தி செய்யப்பட்ட போதிலும், இடவசதி போதியதாக இல்லாமை காரணமாக உற்பத்தி செய்ய முடிந்திருப்பது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலாகும்.

குளோரினை பாதுகாப்பாக பயன்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள்

களுத்துறை கைத்தொழில் அலகில் இடம்பெற்ற குளோரின் கசிவு சம்பவத்தை அடுத்து குளோரின் இறக்குமதி செய்வது முதல் வாடிக்கையாளர்களின் நுகர்வு வரை குளோரின் பயன்படுத்தும் போது ஆபத்துக்கள் ஏற்படக்கூடிய விடயங்கள் தொடர்பில் கம்பனி ஆழமாக ஆராய்ந்தது. இதன் போது ஆபத்துக்கள் இடம்பெறுவதற்குள்ள வாய்ப்புக்கள் மற்றும் அது தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏற்கெனவே இனங்காணப்பட்டுள்ளன.

2013 ஆம் ஆண்டின் இறுதியில் முதலீட்டு சபைக்கு உரித்தான ஹொரனை வகவத்த கைத்தொழில் வலயத்திலிருந்து 2 1$2 ஏக்கர் காணியைப் பெற்றுக் கொள்ள முடிந்ததுடன், மேற்படி வளவில் களஞ்சியமொன்றை நிர்மாணிப்பதற்கு மற்றும் நவீன தொழில்நுட்பத்தைக் கொண்ட குளோரின் கேஸ் உறிஞ்சும் கட்டமைப்பை பொருத்த இயலுமாயிற்று. மேலும் மேற்படி வளவில் நவீன முறைகளுக்கு அமைய குளோரிரை மீள்நிரப்பும் பணிக்குத் தேவையான சகல நிர்மாணிப்புக்களையும் கூடிய விரைவில் நிறைவு செய்ய எதிர்பார்க்கப்படுவதுடன், அதன் மூலம் திரவ குளோரின், பிளீசின் தூள் மற்றும் வேறு இரசாயன பதார்த்தங்களுக்கு நாட்டில் நிலவும் தேவையை பூர்த்தி செய்ய கம்பனிக்கு இயலுமாகும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

900 கி.கி. குளோரின் சிலிண்டர்கள் உரிய வழங்குநர்களினால் சர்வதேச தரநியமங்களுக்கு அமைய பரிசோதிக்கப்பட்டு உரிய நாட்டின் தகுந்த ஒழுங்குறுத்தல் அதிகாரிகளினால் சான்றுப்படுத்தப்பட்டுள்ளன. 68 கி.கி. சிலிண்டர்கள் மேற்படி தரநியமங்களுக்கு அமைய உள்நாட்டில் பரிசோதிக்கப்படுகின்றன. குளோரின் பயன்பாடு தொடர்பில் இடம்பெறக்கூடிய பொது மக்கள் உபத்திரவங்களுக்குப் பதிலாக பொது மக்களின் பொறுப்புக்கு ரூ.மி. 100 ஆன காப்புறுதி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, குளோரின் பயன்பாடு தொடர்பில் கம்பனியின் பயிற்றப்பட்ட ஊழியர்கள் வேறு குளோரின் வாடிக்கையாளர்களுக்காக நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையின் பம்பி அறைகளில் பயிற்றுவிக்கும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தி அபாயங்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக பயன்படுத்தவென பாதுகாப்பு உபகரணத் தொகுதிகளை அறிமுகம் செய்துள்ளார்கள்.

நிதிப் பிரிவு

நிதிப் பிரிவு ஒரு நிறைவேற்று அலுவலரையும், முகாமைத்துவ உதவியாளர் தரத்தைச் சேர்ந்த அலுவலர்கள் ஐந்து பேரையும் உள்ளடக்கியுள்ளது. மீளாய்வுக்கு உட்படுத்தும் ஆண்டில் நிதிப் பிரிவின் குறுங்கால உபாயமுறைகளைத் தயார் செய்யும் போது நீண்டகால முதலீடுகள் மற்றும் கூட்டான திட்டங்களைத் தயார் செய்யம் போதும் பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது. திருத்திய தகவல்கள் சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு, பணிப்பாளர் சபைக்கும், நேர்வரிசை அமைச்சு மற்றும் திறைசேரிக்கும் அறிக்கையிடப்பட்டு நிதிப் பிரிவு தமது பிரதான பொறுப்பை நிறைவேற்றியுள்ளது. திட்டமிடப்பட்ட இலாபத்தை அடைந்துகொள்வதற்குத் தேவையான சந்தர்ப்பங்களில் ஏனைய பிரிவுகளுக்கு அவர்களின் வழிகாட்டல்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டன. நிதிப் பிரிவு கம்பனியின் உள்ளக கட்டுப்பாட்டு முறைகளைப் பின்பற்றி, காலத்திற்கு

ஏற்றவாறு சட்டரீதியான தேவைகளைப் பூர்த்தி செய்து வெளி நிறுவனங்களுடன் தொடர்புகளைப் பேணி கம்பனியின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தையும் அடைந்துகொள்ள பங்களிப்பு வழங்கியுள்ளது.

சந்தைப்படுத்தல் பிரிவு

கம்பனியின் சந்தைப்படுத்தல் மற்றும் விநியோக நடவடிக்கைகள் வழிப்படுத்தப்படுவது சந்தைப்படுத்தல் பிரிவினாலாகும். மேற்படி பிரிவானது உதவிப் பொது முகாமையாளர், முகாமைத்துவ உதவியாளர்கள் மூன்று பேரைக் கொண்டதாக உள்ளது. சந்தைப்படுத்தல் பிரிவு முக்கியமாக திரவக் குளோரின், கோஸ்ரிக் சோடா, ஹைட்ரோகுளோரிக் அமிலம் மற்றும் பிளீசின் திரவத்தை சந்தைக்கு விநியோகிக்கின்றது. பொருட்களுக்கான வாடிக்கையாளர்களின் கேள்வியை ஆராய்ந்து தேவையானவாறு இருப்புக் கட்டுப்பாட்டைப் பேணிவருவதற்கும் இப்பிரிவு நடவடிக்கை மேற்கொள்கின்றது. அவர்கள் காலத்திற்குக் காலம் சந்தையில் நிலவும் விலைகளை அவதானிப்புச் செய்வதுடன், அதற்கு இசைவாக கம்பனியின் பொருட்களின் விலைகளும் இற்றைப்படுத்தப்படும்.

வழங்கல் பிரிவு

வழங்கல் பிரிவு பிரதானமாக கம்பனியின் சகல கொள்வனவு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளது. இப்பிரிவு ஒரு நிறைவேற்று அலுவலரையும, முகாமைத்துவ உதவியாளர்கள் ஐந்து பேரையும் கொண்டுள்ளது. மீளாய்வுக்கு உட்படுத்தும் ஆண்டில் வழங்கல் பிரிவு வழங்குநர்களுடன் கலந்துரையாடி, குறைந்த விலையில் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கு பெரும்முயற்சிகளை மேற்கொண்டுள்ளதுடன், அதன் மூலம் கம்பனியின் இலாபத்திலும் சாதகமான பெறுபேறு அடையப்பெற்றுள்ளது.

நிருவாக பிரிவு

கம்பனியின் பாரிய பிரிவாகக் காணப்படுகின்ற நிருவாகப் பிரிவு ஊழியர்கள் 27 பேரைக் கொண்டுள்ளது. மேற்படி பிரிவு சிரேஷ்ட நிறைவேற்று அலுவலர்கள் மூன்று பேரையும், நடுத்தர மட்டத்திலான நிறைவேற்று அலுவலர்கள் 4 பேரையும், முகாமைத்துவ உதவியாளர்கள் மூன்று (3) பேரையும் மற்றும் ஊழியர் மற்றும் நடவடிக்கை செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ள ஊழியர்கள் 17 பேரையும் கொண்டுள்ளது. கம்பனியின் ஒட்டுமொத்த நிருவாக செயற்பாடுகள் முகாமைத்துவம் செய்யப்படுவது இப்பிரிவின் மூலமாகும். சகல சட்டபூர்வமான கொடுப்பனவுகளையும் அங்கீகரிப்பதும், நாளாந்தம் வருகைதருவதன் பதிவேடுகளை பேணிவருதல், சகல தொடர்பாடல்கள் மற்றும் ஆவணங்களைத் தயார் செய்வதும், போக்குவரத்து நடவடிக்கைகளை வழிநடாத்துவதும், வளவுகளை பேணிவருவதும் உள்ளிட்ட நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஹொரண மற்றும் களுத்துறை மீள்நிரப்பல் அலகுகள்

ஹொரண மற்றும் களுத்துறை மீள்நிரப்பல் அலகுகள் பிரதிப் பொது முகாமையாளர் ஒருவரையும் (பொறியியல்) நிறைவேற்று அலுவலர்கள் இருவரையும், முகாமைத்துவ உதவியாளர்கள் ஆறு (06) பேரையும், ஒரு வேலை மேற்பார்வையாளரையும், அலுவலக சிற்றூழியர்கள் பன்னிரண்டு (12) பேரையும் கொண்ட பதவியணியைக் கொண்டதாக இயங்கிவருகின்றது. மேற்படி பிரிவு 68 கி.கி. சிலிண்டர்களை நிரப்புவது தொடர்பிலான ஒட்டுமொத்த செயற்பாடுகளையும் வழிநடாத்தல், பாதுகாப்பு உபகரணத் தொகுதிகளை தயார் செய்தல் மற்றும் பயிற்றுவித்தல் நிகழ்ச்சித்திட்டங்களை வழிநடாத்துகின்றது. 2014 ஆம் ஆண்டில் இப்பிரிவு திருப்திகரமாக தமது நடவடிக்கைகளை மேற்கொண்டது.

நன்றி நவிலல்

கம்பனியின் பதில் பொது முகாமையாளர் என்ற வகையில், எமது பதவியணியினரின் திறமைகள் மற்றும் அர்ப்பணிப்பு பற்றி எனக்கு நேரடியான புரிந்துணர்வு உள்ளது.

கம்பனியின் முன்னேற்றத்திற்காக எனக்கு அயராத ஒத்துழைப்பை வழங்கிய கம்பனியின் தவிசாளர் மற்றும் பணிப்பாளர் சபைக்கும், கம்பனி எதிர்கொண்ட சவால்களுக்கு மத்தியில் முழுப் பலத்தையும் பிரயோகத்து ஆக்கபூர்வமாக ஒத்துழைப்புடன் நடவடிக்கை மேற்கொண்டு நிறுவனத்தின் முன்னேற்றத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட பதவியணியினருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திரு ஜீ.ஏ.ஜே. விஜேசுந்தர
பதில் பொது முகாமையாளர்,
பரந்தன் கெமிகல்ஸ் கம்பனி லிமிடட்.

2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான பணிப்பாளர் சபை அறிக்கை

பரந்தன் கெமிகல்ஸ் கம்பனியின் பணிப்பாளர் சபை, 2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான ஆண்டறிக்கை, கணக்குகள் மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை இத்துடன் சமர்ப்பிக்கின்றது.

அறிமுகம்

வியாபார நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்காக 1987 இன் 23 ஆம் இலக்க அரசாங்க கூட்டுத்தாபனங்கள் அல்லது அரசுக்கு உரித்தான வியாபார நிறுவனங்களை, அரச கம்பனிகளாக மாற்றியமைக்கும் சட்டத்தின் கீழ் பரந்தன் கெமிகல்ஸ் கூட்டுத்தாபனம், அரசுக்கு உரித்தான வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களைக் கொண்ட கம்பனியாக 1991.01.17 ஆம் திகதி தாபிக்கப்பட்டது.

பிரதான செயற்பாடுகள்

திரவ குளோரின், கோஸ்ரிக் சோடா திண்மம், செதில்கள் மற்றும் ஹைட்ரோக்குளோரிக் அமிலத்தை இறக்குமதி செய்து விற்பனை செய்தல் மற்றும் களுத்துறை குளோரின் மீள் நிரப்பல் பிரிவில் 900 கி.கி. சிலிண்டர்களிலிருந்து 68 கி.கி. சிலிண்டர்களுக்கு திரவக் குளோரின் மீள் நிரப்புவது நிறுவனத்தின் பிரதான செயற்பாடுகளாகும்.

வியாபார மீளாய்வு

கம்பனியின் வருடாந்த செயற்பாடுகள் தொடர்பில் தவிசாளரின் கூற்றில் விரிவான தகவல்கள் உள்ளடங்குகின்றன. இது பணிப்பாளர் சபை அறிக்கையின் ஒரு பகுதியுடன் சம்பந்தப்படுகின்றது.

பணிப்பாளர் சபை
தகைமைவாய்ந்த அதிகாரியொருவரின் கீழ் இயங்கிவந்தது.

தகைமைவாய்ந்த அதிகாரியின் பெயர்
திரு எரிக் இளயப்பஆரச்சி

ஒப்பந்தங்கள் தொடர்பில் பணிப்பாளர்களின் விருப்பம்

கம்பனியுடன் செய்துகொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் தொடர்பில் அவருக்கு எந்தவொரு ஊக்கமும் இல்லை என்பதை தகைமைவாய்ந்த அதிகாரி உறுதி செய்துள்ளார்.

பணிப்பாளர்களின் பொறுப்பு பற்றிய கூற்று

2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகள் மற்றும் கம்பனியின் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யும் போது ஏற்புடையதாகின்ற சட்டங்கள் மற்றும் வேறு ஒழுங்குவிதிகளை பின்பற்றுவதை உறுதி செய்வது தொடர்பில் கம்பனியின் பணிப்பாளர்கள் பொறுப்புக்கூறல் வேண்டும்.

நிதி நிலைமைகளை உள்ளடக்கியதாக நியாயமான உண்மைத்தன்மையுடன் கம்பனியின் கணக்கு அறிக்கைகளைப் பேணிவருவதில் பணிப்பாளர்கள் சமமானவாறு பொறுப்புக்கூறல் வேண்டும்.

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் தொடர்ச்சியான நிலைத்திருத்தல் மற்றும் விடய முன்னெடுப்பு பற்றிய பொறுப்பை பணிப்பாளர்கள் பொறுப்பேற்றுக் கொள்கின்றார்கள் என்பதுடன், கம்பனியின் நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யும் போது பின்வரும் சட்டங்கள் பின்பற்றப்படுகின்றன என்பதையும் உறுதி செய்கின்றார்கள்.

- இலங்கை பட்டயம் பெற்ற கணக்காளர்கள் நிறுவகத்தினால் வெளியிடப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்கள்
- உரிய கணக்கீட்டுக் கொள்கைகளை தெரிவு செய்துகொண்டு அவற்றை ஏற்புடையவாறு பயன்படுத்திக் கொள்ளல்.
- நிதிக் கூற்றுக்களில் உண்மையாக மற்றும் தெளிவாக கருத்துக்களை வெளிப்படுத்துவதற்காக அறிவுப்பூர்வமான மற்றும் நியாயமான அடிப்படையில் நிதிக் கூற்றுக்களுக்கு ஏற்புடையவாறான மதிப்பீடுகள் மற்றும் தீர்ப்புக்கள்.

சொத்துக்களைப் பாதுகாப்பதில் கம்பனி உரிய, போதியளவிலான உள்ளகக் கட்டுப்பாடுகள் மற்றும் கணக்கீட்டு அறிக்கைகளைப் பயன்படுத்திக் கொண்டுள்ளது. கடந்த ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் போது நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு அமைய கம்பனியின் வெளிக் கணக்காய்வாளர் ஹேமசந்திர என்ட் கம்பனி மீண்டும் நியமனம் செய்யப்பட்டது. நிதிக் கூற்றுக்கள் பற்றி அவர்களின் கருத்துரைகளுக்கு உகந்ததென்பதை அவர்கள் கவனத்தில்

கொண்டார்கள். தேவையான பரிசோதித்துப் பார்த்தல்களுக்காக தடையின்றி பிரவேசிப்பதற்கான வசதிகள் அவர்களுக்குப் செய்துகொடுக்கப்பட்டன. நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான அவர்களின் பொறுப்புக்கள், அடுத்துவரும் பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு அறிக்கையில் தரப்பட்டுள்ளன.

பணிப்பாளர்களின் விருப்பம் பற்றிய ஆவணம்

பணிப்பாளர்களின் விருப்பம் பற்றிய ஆவணம் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு அமைய பேணிவரப்படுகின்றது.

பணிப்பாளர்களின் கருத்துரை

2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கு கம்பனி தொடர்பிலான பணிப்பாளர்களின் கருத்துரை நிதிக் கூற்றுக்களின் 4 ஆம் குறிப்பில் தரப்பட்டுள்ளது.

நியாயாதிக்க கொடுப்பனவுகள்

அரசாங்கத்துக்கு இறக்குமதி வரி, தீர்வை வரி போன்றவற்றை செலுத்துவது உட்பட சகல நியாயாதிக்க கொடுப்பனவுகள் மற்றும் ஊழியர்களுக்கான நியாயாதிக்க கொடுப்பனவுகள், தமது உச்சளவான அறிவு மற்றும் நம்பிக்கையின் பிரகாரம் கம்பனியினால் முறையாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது என்பது தொடர்பில் பணிப்பாளர்கள் திருப்தியுறுகின்றார்கள்.

ஆதனம், இயந்திர அறை மற்றும் உபகரணம்

மீளாய்வு ஆண்டில் ஆதனங்கள், இயந்திரஅறை மற்றும் உபகரணங்களின் குறிப்பிடத்தக்களவான மாற்றங்கள் கணக்குளின் 32 ஆம் பக்கத்தின் 8 ஆம் குறிப்பில் தரப்பட்டுள்ளன.

இலாபப்பகிர்வை செலுத்தல்

2018 ஆம் ஆண்டுக்கு ரூ.மி. 10 ஆன இலாபப்பகிர்வை கம்பனி செலுத்தியுள்ளது.

உத்தேச இறுதி இலாபப்பகிர்வு

2019 ஆம் ஆண்டுக்கு ரூ.மி. 3 ஆன இலாபப்பகிர்வு பிரேரிக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வாளர்

மீளாய்வு ஆண்டில் கம்பனியின் கணக்காய்வாளராக பட்டயம் பெற்ற கணக்காளர்களான ரன்வத்த என்ட் கம்பனி காணப்பட்டது.

ஆண்டுக்கான கணக்காய்வுக் கட்டணமாக ரூ. 250,000.00 ஆன ஏற்பாடுகள் செய்யப்பட்டன. தமது சுதந்திரந்திற்கு பாதிப்பு ஏற்படக்கூடிய எந்தவொரு தொடர்போ அல்லது விருப்பமோ கணக்காய்வாளர்களினால் கம்பனியுடன் பேணிவரப்பட்டிருக்கவில்லை.

கடன் செலுத்துவதற்கு போதியளவு சொத்துக்கள் உள்ளனவா என்பது பற்றிய பரிசோதனை

இலாபப்பகிர்வை பிரேரித்தவுடன் பணிப்பாளர்கள் கம்பனிக்கு உரித்தான கடன் செலுத்துவதற்கு போதியளவு சொத்துக்கள் காணப்படுகின்றன என்பதை மதிப்பீடு செய்துள்ளார்கள் என்பதுடன், 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் மூலம் உரிய கடனைச் செலுத்த போதியளவு சொத்துக்கள் காணப்படுகின்றது என்பதை பரிசோதிப்பதற்கு கம்பனி செயற்பட்டுள்ளது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யும் போது பயன்படுத்திக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள், (30) ஆம் பக்கம் முதல் (35) ஆம் பக்கம் வரை குறிப்பிடப்பட்டுள்ளன.

எதிர்காலம் பற்றிய முன் நோக்கு

பரந்தன் குளோரின் தொழில்சாலையை மீளக் கட்டியெழுப்புவது எமது நோக்கமாகும்.

கணக்காய்வுக் குழு

கணக்காய்வுக் குழுவானது, பணிப்பாளர் சபையின் நிறைவேற்று அல்லாத உறுப்பினர்கள் மூவரை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை, நியாயாதிக்க நிதிக் கூற்றுக்கள் மற்றும் முகாமைத்துவக் கணக்குகள் பற்றிய வினைத்திறன் தொடர்பில் கணக்காய்வுக் குழு தொடர்ச்சியாக மீளாய்வு செய்துள்ளது.

நன்றி நவிலல்

இன்றைய முன்னேற்றத்தை அடைந்துகொள்வதில் எமது வாடிக்கையாளர்களிடமிருந்து கிடைத்த பூரண ஒத்துழைப்பு மற்றும் பதவியணியினர் வழங்கிய ஒத்துழைப்பும், அர்ப்பணிப்பு மற்றும் மேற்கொண்ட அயராத முயற்சிகளையும் பணிப்பாளர் சபை மிக்க உயர்வாக மதிக்கின்றது.

2019 ஆம் ஆண்டில் செயற்பாட்டு நிலையத்தின் மீள்நிரப்பல் பணிகள் - சுத்தப்படுத்தும் பணி – தொழில்சாலை பாதுகாப்புச் செயற்பாடுகள்

2019 ஆம் ஆண்டில் நிறுவனத்தின் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள நடுத்தரகால நடவடிக்கைகள்

2019 ஆம் ஆண்டு நிறுவனத்தினால் ரூபா மில்லியன் 287 ஆன விற்பனை வருமானத்தையும், ரூபா மில்லியன் 73 ஆன வரிக்குப் பிந்திய இலாபத்தையும் அடைந்துகொள்ள திட்டமிடப்பட்டது. உத்தேச விற்பனையை பெற்றுக கொள்வதற்காக திரவ குளோரின் விற்பனையை அதிகரித்துக் கொள்வதற்கும், கோஸ்ரிக் சோடா மற்றும் ஹைட்ரோகுளோரிக் அமிலத்துக்கு விசேட வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்துவதன் மூலம் விற்பனையை அதிகரித்துக் கொள்ளவும் திட்டங்கள் தயார் செய்யப்பட்டுள்ளன. இதற்கமைய கோஸ்ரிக் சோடா மற்றும் ஹைட்ரோகுளோரிக் அமிலத்தை குறைந்த செலவின் கீழ் இறக்குமதி செய்து விற்பனையை அதிகரித்துக் கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

புதிய உற்பத்திகளின் கீழ் பிளீசிங் பவுடரை இறக்குமதி செய்வதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. நீண்ட கால அடிப்படையில் பிளீசின் பவுடரை நாட்டினுள் உற்பத்தி செய்து கொள்ளக்கூடியவாறு அதற்காக 2015 ஆம் ஆண்டு புதிய கைத்தொழில்சாலையொன்றை தாபிக்கவும் கம்பனி திட்டமிட்டுள்ளது.

தற்போது ஒப்பந்ததாரர் ஒருவரினால் மேற்கொள்ளப்படுகின்ற குளோரின் மீள்நிரப்பல் நடவடிக்கைகளை 2014 ஆம் ஆண்டு சுமார் ரூபா மில்லியன் 7.2 ஆன செலவில் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டது. 2015 இல் இதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

இந்த செயன்முறை கம்பனியின் செயற்பாடுகளின் ஒரு பகுதியாக மேற்கொள்ளப்படும் என்று கம்பனி எதிர்பார்க்கின்றது.

1976 ஆம் ஆண்டு முதல் கம்பனியின் தலைமை அலுவலகம் துறைமுக அதிகாரசபைக்கு உரித்தான வளவொன்றில் பேணிவரப்படுகின்றது. மேற்படி கட்டிடம் தொடர்ந்தும் அலுவலகத்தை பேணிவருவதற்கு உகந்த நிலையில் இல்லாமை காரணமாக புதுப்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள அல்லது புதிய கட்டிடமொன்றை நிர்மாணிக்க வேண்டிய நிலை காணப்படுகின்றது. எனினும் துறைமுக அதிகாரசபை இந்த வளவினை சுவீகரித்துக் கொள்ள சட்ட நடவடிக்கைகளில் பிரவேசித்துள்ளதுடன், அந்நடவடிக்கைகள் முறையாக நிறைவடைந்த பின்னர் இக்கட்டிடத்தை புதுப்பிப்பதற்கு அல்லது புதிய கட்டிடமொன்றை நிர்மாணிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. MU/A/PCCL/FA/01/ 2019 | ඔබේ අංකය / உமது இல. / Your No. | දිනය / திகதி / Date 13 July 2020

Chairman

Paranthan Chemicals Company Limited

Report of the Auditor General on the Financial Statements and Other Legal and Regulatory Requirements of the Paranthan Chemicals Company Limited for the year ended 31 December 2019 in terms of Section 12 of the National Audit Act, No. 19 of 2018.

---

1. Financial Statements

1.1 Opinion

The audit of the financial statements of the Paranthan Chemicals Company Limited ("Company") for the year ended 31 December 2019 comprising the statement of financial position as at 31 December 2019 and the statement of comprehensive income, statement of changes in equity and cash flow statement for the year then ended, and notes to the financial statements, including a summary of significant accounting policies, was carried out under my direction in pursuance of provisions in Article 154(1) of the Constitution of the Democratic Socialist Republic of Sri Lanka read in conjunction with provisions of the National Audit Act No. 19 of 2018 . My report to Parliament in pursuance of provisions in Article 154 (6) of the Constitution will be tabled in due course.

In my opinion, the accompanying financial statements give a true and fair view of the financial position of the Company as at 31 December 2019, and of its financial performance and its cash flows for the year then ended in accordance with Sri Lanka Accounting Standards.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව | இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. | No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 | +94 11 2 88 72 23 | ag@auditorgeneral.gov.lk | www.naosl.gov.lk

1.2 Basis for Opinion

I conducted my audit in accordance with Sri Lanka Auditing Standards (SLAuSs). My responsibilities, under those standards are further described in the Auditor's Responsibilities for the Audit of the Financial Statements section of my report. I believe that the audit evidence I have obtained is sufficient and appropriate to provide a basis for my opinion.

1.3 Responsibilities of Management and Those Charged with Governance for the Financial Statements

Management is responsible for the preparation of financial statements that give a true and fair view in accordance with Sri Lanka Accounting Standards, and for such internal control as management determine is necessary to enable the preparation of financial statements that are free from material misstatement, whether due to fraud or error.

In preparing the financial statements, management is responsible for assessing the Company's ability to continue as a going concern, disclosing, as applicable, matters related to going concern and using the going concern basis of accounting unless management either intends to liquidate the Company or to cease operations, or has no realistic alternative but to do so.

Those charged with governance are responsible for overseeing the Company's financial reporting process.

As per Section 16(1) of the National Audit Act No. 19 of 2018, the Company is required to maintain proper books and records of all its income, expenditure, assets and liabilities, to enable annual and periodic financial statements to be prepared of the Company

1.4 Auditor's Responsibilities for the Audit of the Financial Statements

My objective is to obtain reasonable assurance about whether the financial statements as a whole are free from material misstatement, whether due to fraud or error, and to issue an auditor's report that includes my opinion. Reasonable assurance is a high level of assurance, but is not a guarantee that an audit conducted in accordance with Sri Lanka Auditing Standards will always detect a material misstatement when it exists. Misstatements can arise from fraud or error and are considered material if, individually or in the aggregate, they could reasonably be expected to influence the economic decisions of users taken on the basis of these financial statements.

As part of an audit in accordance with Sri Lanka Auditing Standards, I exercise professional judgment and maintain professional scepticism throughout the audit. I also:

- Identify and assess the risks of material misstatement of the financial statements, whether due to fraud or error, design and perform audit procedures responsive to those risks, and obtain audit evidence that is sufficient and appropriate to provide a basis for my opinion. The risk of not detecting a material misstatement resulting from fraud is higher than for one resulting from error, as fraud may involve collusion, forgery, intentional omissions, misrepresentations, or the override of internal control.

- Obtain an understanding of internal control relevant to the audit in order to design audit procedures that are appropriate in the circumstances, but not for the purpose of expressing an opinion on the effectiveness of the Company's internal control.

- Evaluate the appropriateness of accounting policies used and the reasonableness of accounting estimates and related disclosures made by the management.

- Conclude on the appropriateness of the management's use of the going concern basis of accounting and based on the audit evidence obtained, whether a material uncertainty exists related to events or conditions that may cast significant doubt on the Company's ability to continue as a going concern. If I conclude that a material uncertainty exists, I am required to draw attention in my auditor's report to the related disclosures in the financial statements or, if such disclosures are inadequate, to modify my opinion. My conclusions are based on the audit evidence obtained up to the date of my auditor's report. However, future events or conditions may cause the Company to cease to continue as a going concern.

- Evaluate the overall presentation, structure and content of the financial statements, including the disclosures, and whether the financial statements represent the underlying transactions and events in a manner that achieves fair presentation.

I communicate with those charged with governance regarding, among other matters, significant audit findings, including any significant deficiencies in internal control that I identify during my audit.

2. Report on Other Legal and Regulatory Requirements

National Audit Act, No. 19 of 2018 and Companies Act, No. 7 of 2007 include specific provisions for following requirements.

- I have obtained all the information and explanation that required for the audit and as far as appears from my examination, proper accounting records have been kept by the Company as per the requirement of section 163 (1) (d) of the Companies Act, No. 7 of 2007 and section 12 (a) of the National Audit Act, No. 19 of 2018.

- The financial statements of the Company comply with the requirement of section 151 of the Companies Act, No. 07 of 2007.

- The financial statements presented is consistent with the preceding year as per the requirement of section 6 (1) (d) (iii) of the National Audit Act, No. 19 of 2018.

- The financial statements presented includes all the recommendations made by me in the previous year as per the requirement of section 6 (1) (d) (iv) of the National Audit Act, No. 19 of 2018.

Based on the procedures performed and evidence obtained which limited to matters that are material, nothing has come to my attention;

- to state that any member of the governing body of the Company has any direct or indirect interest in any contract entered into by the Company which are out of the normal course of business as per the requirement of section 12 (d) of the National Audit Act, No. 19 of 2018,

- to state that the Company has not complied with any applicable written law, general and special directions issued by the governing body of the Company as per the requirement of section 12 (f) of the National Audit Act, No. 19 of 2018 except for ;

	Reference to law/ direction	**Description**
(a)	Section 2.3 of the Public Enterprises Circular No.2018/3 of 07 December 2018.	The bonus for the year 2019 had been paid in December 2019 before the preparation of the annual financial statements.
(b)	Circular No. 326 dated 23 November 1986 issued by the then Ministry of Industry and Science.	Without the approval of the Department of Management Services, the Company had been paid annual leave encashment for 42 days amounting to Rs. 2,660,629 for the year 2019.
(c)	Section 6.5.3 of the Public Enterprises Circular No. PED 12 of 02 June 2003.	The annual reports pertaining to year 2015, 2016, 2017 2018 had not been tabled in the parliament.
(d)	Section 133(1) of the Company Act No 07 of 2007.	The Company had been failed to hold the annual general meeting from the year 2014.
(e)	Section 01 of the Public Enterprises Circular No. PED/2015/01 of 25 May 2015.	Without the approval of the Secretary to the General Treasury, the Company had been paid monthly transport allowances of Rs.15,000 to four (04) officers of the Company.

- to state that the Company has not performed according to its powers, functions and duties as per the requirement of section 12 (g) of the National Audit Act, No. 19 of 2018,

- to state that the resources of the Company had not been procured and utilized economically, efficiently and effectively within the time frames and in compliance with the applicable laws as per the requirement of section 12 (h) of the National Audit Act, No. 19 of 2018 except for;

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

The production of Chlorine in the factory had been stopped and the factory had been closed since in year 1986 and entire Chlorine requirement of the country is imported since 1986. However, the Company had been spent a sum of Rs.4,148,655 to plant commercially valuable trees in 20 acres of the factory land, even though the factory had been closed.

W.P.C. Wickramaratne
Auditor General

2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக்கூற்று

	குறிப்பு	2019 ரூபா	2018 ரூபா
வருமானம்	1	287,168,845	302,627,105
விற்பனை செலவினம்	2	(151,904,349)	(157,924,310)
மொத்த இலாபம்		135,264,496	144,702,795
ஏனைய செயற்பாட்டு வருமானம்	3	38,477,530	33,279,066
		173,742,026	177,981,066
செலவினம்			
விற்பனை மற்றும் விநியோகச் செலவினம்		(1,494,595)	(1,066,646)
நிருவாக மற்றும் தாபன செலவினம்		(98,614,771)	(102,402,002)
		(100,109,366)	(103,468,648)
		73,380,727	74,513,213
		(251,933)	(249,297)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான இலாபம்	4	73,380,727	74,513,213
குறைக்க : நிதிச் செலவினம்		(251,933)	(249,297)
வரிக்கு முந்திய இலாபம்		73,380,727	74,263,916
குறைக்க : வரி அறவீடு	5	(30,192,565)	(14,390,221)
வரிக்குப் பிந்திய தேறிய இலாபம்		43,188,162	59,873,695
<u>வேறு விரிவான வருமானங்கள்</u>			
உண்மை நட்டம்		471,756	(3534)
விரிவான வருமானம் மீதான வரிப் பொறுப்பு		(66,046)	(850)
		43,593,872	59,869,311
ஆண்டுக்கான மொத்த விரிவான வருமானம்			
ஒரு பங்குக்கான உழைப்பு (ரூ.)	6	10.90	14.97
ஒரு பங்குக்கான பங்கிலாம் (ரூ.)	7	0.75	2.50

2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கான நிதி நிலைமைக் கூற்று

சொத்துக்கள்	குறிப்பு	2019 ரூபா	2018 ரூபா
சொத்துக்கள்			
நடைமுறையல்லாத சொத்துக்கள்			
ஆதனம், பொறி மற்றும் உபகரணம்	8	288,300,442	277,034,696
மேற்கொண்டுவரும் வேலைகள்		2,785,739	2,900,527
		7,994,545	17,156,866
		299,080,545	294,191,562
நடைமுறை சொத்துக்கள்			
வியாபார இருப்பு	9	25,480,229	24,592,647
வியாபார மற்றும் வேறு பெறுகைகள்		46,820,411	48,946,085
பதவியணி மற்றும் வேறு கடன்பட்டோர்		20,871,012	21,449,736
வைப்புக்கள், முன்கொடுப்பனவு மற்றும் முற்பணம்		5,225,562	6,719,791
குறுங்கால முதலீடுகள்	10	387,807,350	314,962,683
காசும், காசுக்கு சமமானவைகளும்		8,605,086	12,173,243
மொத்த நடைமுறை சொத்துக்கள்		494,809,650	428,844,185
மொத்த சொத்துக்கள்		793,890,376	723,035,747
உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்			
மூலதனம் மற்றும் சேர்மம்			
வெளிப்படுத்தப்பட்ட மூலதனம்	11	40,000,000	40,000,000
தடுத்துவைக்கப்பட்ட இலாபம்		401,364,772	357,770,900
மூலதன சேர்மம்			
வேறு உரிமையாண்மை மூலதன விடயங்கள்	12	220,795,490	220,795,490
		662,160,262	618,566,390
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்			
ஓய்வூதியப் பயன்களின் கடப்பாடுகள்	13	11,028,082	12,932,768
பிற்போடப்பட்ட வரி	14	61,091,783	42,135,985
		72,119,865	55,068,753
நடைமுறை பொறுப்புக்கள்			
வியாபார கடன்கொடுத்தோர் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள்		50,464,039	41,470,134
நடைமுறை வரிப் பொறுப்புக்கள்		8,539,837	7,930,470
வங்கி மேலதிகப் பற்றுலெංකු අයිරා		606,373	-
மொத்த நடைமுறை பொறுப்புக்கள்		59,610,248	49,400,604
மொத்த உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்		793,890,376	723,035,747

இந்த நிதி அறிக்கைகள் 2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டத்தின் 7 ஆம் பிரிவுக்கு அமைய தயார் செய்யப்பட்டுள்ளன என்பதை உறுதி செய்கின்றேன்.

நிதிப் பிரிவின் தலைவர்
இந்த நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்தமை தொடர்பில் பணிப்பாளர் சபை பொறுப்புக்கூறல் வேண்டும்.
இந்த நிதிக் கூற்றுக்களை பணிப்பாளர் சபை அங்கீகரித்துள்ளது.

தவிசாளர் **பணிப்பாளர்**

இலக்கம் 25 முதல் 35 வரையான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட கணக்கீட்டுக் கொள்ளைகள் மற்றும் குறிப்புக்கள் இந்த நிதிக்கூற்றுக்களுடன் சம்பந்தப்பட்ட பகுதிகளாகும்.

2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான உரிமையாண்மை மாற்றம் பற்றிய கூற்று

	வெளியிட்ட மூலதனம் ரூபா	மூலதன சேர்மம் ரூபா	வேறு உரிமையாண்மை மூலதன விடயங்கள் ரூபா	திட்டிய இலாபம் $(நட்டம்) ரூபா	மொத்தம் ரூபா
2018 சனவரி 01 ஆம் திகதிக்கு மீதி	40,000,000	-	220,795,490	308,901,589	569,697,079
பங்கிலாபம் செலுத்தல்	-	-	-	(11,000,000)	(11,000,000)
ஆண்டுக்கான சீராக்கல்	-	-	-	-	
ஆண்டுக்கான தேறிய இலாபம்	-	-	-	59,869,311	59,869,311
முன்னைய சீராக்கல்கள்				-	-
2018 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி	40,000,000	-	220,795,490	357,770,900	618,566,390
2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி	40,000,000		220,795,490	357,770,900	618,566,390
முன்னைய ஆண்டு தொடர்பிலான சீராக்கல்கள்	-	-	-	-	-
பங்கிலாபம் செலுத்தல்	-	-	-		
ஆண்டுக்கான தேறிய இலாபம்	-	-	-	43,593,872	43,593,872
முன்னைய சீராக்கல்கள்					
2019 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீளத்தாபித்த மீதி	40,000,000	-	220,795,490	401,364,772	662,160,262

2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

	2019 ரூபா	2018 ரூபா
வரிக்கு முந்திய தேறிய இலாபம்	73,380,727	74,263,916
<u>சீராக்கல்கள்</u>		
தேய்மானம் ஏற்பாடு	20,433,802	20,077,728
கடன்தீர் நிதி	114,788	114,788
வட்டி வருமானம்	(37,037,498)	(31,626,375)
நிலையான சொத்துக்களின் விற்பனை மூலம் பெற்ற இலாபம்	-	-
ஏற்பாடு	-	-
பணிக்கொடைக்கான ஏற்பாடு	2,190,511	2,385,822
ஊழியர் கடன் வட்டிச் செலவினம்	666,253	772,153
செயற்படு மூலதன மாற்றத்துக்கு முன் செயற்பாட்டு இலாபம்	59,748,583	65,873,243
வியாபார இருப்பு (அதிகரிப்பு) $குறைவு	(887,229)	17,505,376
வியாபார மற்றும் ஏனைய பெறுகைகளின் (அதிகரிப்பு) $குறைவு	2,125,674	(5,736,640)
பதவியணி மற்றும் ஏனைய கடன் (அதிகரிப்பு) $குறைவு	578,723	1,625,560
வைப்புக்களை முன் செலுத்தல் மற்றும் முற்பணங்களின் (அதிகரிப்பு) $குறைவு	(1,406,298)	2,229,154
வியாபார மற்றும் ஏனைய கொடுப்பனவுகளின் அதிகரிப்பு $(குறைவு)	8,993,905	(1,768,723)
	9,404,775	13,854,727
செயற்படு மூலதன மாற்றங்களின் பின் செயற்பாட்டு இலாபம்	69,153,358	79,727,971
செலுத்தப்பட்ட வருமான வரி	(9,000,000	(18,572,699)
செலுத்தப்பட்ட பணிக்கொடை	(3,623,443)	(986,312)
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசு	56,529,916	60,168,960
<u>முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசோட்டம்</u>		
வட்டி வருமானம்	34,677,447	28,455,376
ஆதனம், பொறி மற்றும் உபகரணம் கொள்வனவு	(31,699,548)	(1,753,792)
ஆதனம், பொறி மற்றும் உபகரணம் விற்பனைகளிலிருந்தான காசு	-	-
மேற்கொள்ளப்பட்டு வருகின்ற வேலைகள்	9,162,321	(9,451,856)
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து பெற்ற பயன்படுத்திய காசு	12,140,221	17,249,729
<u>நிதி நடவடிக்கைகளிலிருந்தான காசோட்டம்</u>		
செலுத்திய பங்கிலாபம்	-	(11,000,000)
நிதி நடவடிக்கைகளிலிருந்து பெற்ற பயன்படுத்திய காசோட்டம்	-	-
காசும், காசுக்கு சமமானவைகளினதும் தேறிய அதிகரிப்பு / குறைவு	68,670,137	66,418,689
ஆண்டின் ஆரம்பத்தில் காசும், காசுக்கு சமமானவைகளும்	327,135,926	260,717,237
ஆண்டின் இறுதியில் காசும், காசுக்கு சமமானவைகளும் (அ குறிப்பு)	395,806,063	327,717,237

		2019 ரூபா	2018 ரூபா
ஆண்டின் இறுதியில் காசும், காசுக்கு சமமானவைகளினதும் மீதி			
நிலையான வைப்பு	- மக்கள் வங்கி	45,808,605	41,691,061
நிலையான வைப்பு	- மக்கள் வங்கி	52,203,327	47,710,032
நிலையான வைப்பு	- மக்கள் வங்கி	13,508,230	12,272,975
நிலையான வைப்பு	- மக்கள் வங்கி	7,016,211	6,401,371
நிலையான வைப்பு	- மக்கள் வங்கி	13,769,769	12,563,131
நிலையான வைப்பு	- மக்கள் வங்கி	13,856,798	12,589,669
நிலையான வைப்பு	- மக்கள் வங்கி	13,476,808	12,295,818
நிலையான வைப்பு	- மக்கள் வங்கி	14,314,470	13,066,489
நிலையான வைப்பு	- மக்கள் வங்கி	13,768,229	12,567,871
நிலையான வைப்பு	- மக்கள் வங்கி	7,023,148	6,410,848
நிலையான வைப்பு	- மக்கள் வங்கி	7,871,072	7,193,585
நிலையான வைப்பு	- மக்கள் வங்கி	12,701,926	11,609,191
நிலையான வைப்பு	- மக்கள் வங்கி	12,775,626	11,607,364
நிலையான வைப்பு	- மக்கள் வங்கி	13,067,592	11,943,398
நிலையான வைப்பு	- மக்கள் வங்கி	12,335,585	11,273,825
நிலையான வைப்பு	- மக்கள் வங்கி	12,302,741	11,122,128
நிலையான வைப்பு	- மக்கள் வங்கி	23,475,295	21,036,411
நிலையான வைப்பு	- மக்கள் வங்கி	35,115,470	31,607,517
நிலையான வைப்பு	- மக்கள் வங்கி	22,088,944	20,000,000
நிலையான வைப்பு	- தேசிய சேமிப்பு வங்கி	10,489,332	-
நிலையான வைப்பு	- தேசிய சேமிப்பு வங்கி	10,442,449	-
நிலையான வைப்பு	- தேசிய சேமிப்பு வங்கி	10,197,838	-
நிலையான வைப்பு	- தேசிய சேமிப்பு வங்கி	10,197,838	-
		387,807,350	314,962,683
மக்கள் வங்கி – தாபனக் கிளை		(606,373)	1,719,157
மக்கள் வங்கி – நிதிச் சந்தை		8,550,762	10,262,584
இலங்கை வங்கி – தாபனக் கிளை		-	36,248
மக்கள் வங்கி – பொம்புவல கிளை		5691	5,439
மக்கள் வங்கி – ஹொரனை கிளை		5,798	26,909
சம்பத் வங்கி		-	49,945
சில்லறைக் காசு – ஹொரனை		18,828	32,208
சில்லறைக் காசு – தலைமை அலுவலகம்		17,097	23,814
சில்லறைக் காசு – களுத்துறை		5,230	17,360
தபால் கட்டண கட்டுநிதி		1,680	80
		7,998,714	12,173,244
		395,806,063	327,135,926

2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

1. **கூட்டிணைக்கப்பட்ட தகவல்கள்**

1.1 **அறிக்கையிடும் விடயம்**

பரந்தன் கெமிகல்ஸ் கம்பனி லிமிடட் நிறுவனம் வரையறுக்கப்பட்ட பொறுப்புக்களைக் கொண்ட கம்பனியாக இருப்பதுடன், இது இலங்கையில் அமைத்துருவாக்கப்பட்டு தாபிக்கப்பட்டுள்ளது. இதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் மற்றும் தலைமை வியாபார நிலையம் கொழும்பு 13, ஸ்ரீ ராமநாதன் வீதி, இலக்கம் 100/25 எனும் முகவரியில் அமைந்துள்ளது.

1.2 **பணிப்பாளர்களினால் நிதிக் கூற்றுக்கள் அங்கீகரிக்கப்படல்**

நிதிக் கூற்றுக்களை வெளியிடுவதற்கு 2020 பெப்ருவரி 28 ஆம் திகதி பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியது.

1.3 **பதவியணி**

ஆண்டின் இறுதியில், கம்பனியின் பதவியணி 56 ஆக இருந்தது. (2018 ஆம் ஆண்டு பதவியணி 62)

1.4 **பிரதான செயற்பாடுகள் மற்றும் அதன் அவசியத்தன்மை**

இரசாயனப் பதார்த்தங்களை இறக்குமி செய்து விற்பனை செய்தல், கம்பனியின் பிரதான செயற்பாடாகும். மீளாய்வு நிதி ஆண்டில் கம்பனியின் பிரதான செயற்பாடுகளின் தன்மையில் குறிப்பிடத்தக்களவு மாற்றங்கள் இடம்பெற்றிருக்கவில்லை.

1.5 **நிதிக் கூற்றுக்கள் பற்றிய பணிப்பாளர்களின் பொறுப்பு**

இலங்கை கணக்கீட்டு அறிக்கையிடல் நியமங்களுக்கு அமைய நிறுவனத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துவம் வகையில் நிதிக் கூற்றுக்களை தயார் செய்வதன் பொறுப்பை பணிப்பாளர் சபை ஏற்றுக் கொள்கின்றது.

1.6 **ஏற்புடையதன்மை பற்றிய கூற்று**

நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கும் நிதி நிலைமை பற்றிய கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமையாண்மையில் இடம்பெற்ற மாற்றம் பற்றிய கூற்று, காசோட்டம் பற்றிய கூற்று மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகள் பற்றிய கூற்று இலங்கை பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு அறிக்கையிடல் நியமங்கள் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய தயார் செய்யப்பட்டுள்ளன.
2011 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிதி ஆண்டு வரை மேற்படி நிதி ஆண்டு உள்ளடங்களாக கம்பனி இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய கணக்குகளை தயார் செய்து சமர்ப்பித்துள்ளது. 2012 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்காக நிதி அறிக்கைகள் முதல் தடவையாக இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு அமைய 2012 சனவரி 01 ஆம் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இந்த இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்கள் சர்வதேச நிதி அறிக்கையிடல் பற்றிய சபையினால் வெளியிடப்பட்ட சர்வதேச நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு அமைய தயார் செய்யப்பட்டுள்ளன.

2. **நிதிக் கூற்றுக்களை தயார் செய்வதற்கு பயன்படுத்தப்பட்ட அடிப்படை**

2.1 **பெறுமதியை மதிப்பீடு செய்யும் அடிப்படை**

நிதிக் கூற்றுக்கள் நின்ற அடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ளதுடன், மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களை தவிர்த்து ஏனைய சொத்து விடயங்களுக்கு கொள்வனவு செலவினத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2.2 **நிதிக் கூற்றுக்களுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ள செலாவணி**

நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்கு கம்பனியின் செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற மற்றும் நிறுவனத்தில் அமுலில் உள்ள பிரதான பொருளாதார சூழலில் பயன்படுத்தப்படுகின்ற செலாவணியான இலங்கை ரூபா பயன்படுத்தப்பட்டுள்ளது.

3. கணக்கீட்டுக் கொள்கைகள்

3.1 கணக்கீட்டுக் கொள்கைகளில் இடம்பெற்ற மாற்றங்கள்

2011 சனவரி 01 ஆம் திகதி ஆரம்ப நிதி நிலைமைக் கூற்றை மாற்றம் செய்ய பயன்படுத்தப்பட்ட இலங்கை கணக்கீட்டு அறிக்கையிடல் நியமங்களுக்கு அமைய நிறுவனத்தின் கணக்கீட்டுக் கொள்கைகள் ஒரேவிதமாக பின்பற்றப்பட்டுள்ளன.

ஒப்பீட்டு ரீதியான பெறுமானங்கள்

முன்னைய ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களை சமர்ப்பிப்பதற்காக நியமங்களுக்கு அமைய திருத்தம் செய்து மிக்க நல்ல அறிக்கையிடலுக்கு இந்த ஆண்டில் மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

3.2 விசேட கணக்குகள் மதிப்பீடு, தீர்மானம் மற்றும் கருதுகோல்கள்

நிதிக் கூற்றுக்களைத் தயார் செய்யும் போது வருமானம், செலவினம், சொத்துக்கள், பொறுப்புக்கள், கணக்கீட்டு மதிப்பீடுகள், கணக்கீட்டு கருதுகோல்களை மேற்கொள்ள முகாமைத்துவத்துக்கு ஏற்படுகின்றது. நிறுவனத்தின் கணக்கீட்டுக் கொள்கைகளை அமுல்படுத்தும் போது எதிர்காலத்தில் தயார் செய்யப்படும் மதிப்பீடுகள், தீர்மானங்கள் மற்றும் அவற்றுக்கான அடிப்படை மற்றும் மூலங்கள் மற்றும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் முன்கொண்டு செல்லும் பெறுமதிகளுக்கு அவற்றிலிருந்ததான தாக்கங்கள் ஆராயப்பட்டுள்ளன.

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை மீள்மதிப்பீடு செய்தல்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை மீள் மதிப்பீடு செய்வதன் கீழ் நியாயமான பெறுமதி கணக்குகளில் பதிவு செய்யப்படுவதுடன், மீள்மதிப்பீட்டு மிகை உரிமையாண்மை பற்றிய கூற்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்யும் நடவடிக்கைகளுக்கு சுயாதீன மற்றும் நிபுணத்துவ விலைமதிப்பாளர் ஒருவரைப் பயன்படுத்தி சொத்துக்களின் நியாயமான பெறுமதிகள் 2010 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளன.

வரியீட்டல்

கம்பனி வருமான வரி, பெறுமதி சேர் வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்பும் வரிக்கு உட்பட்டது. இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு அமைய தயார் செய்யும் போது இன்றைய வருமான வரி, பிற்போடப்பட்ட வரிக்கு ஒதுக்கம் செய்தல் மற்றும் வேறு வரிகளுக்கு ஒதுக்கம் செய்வதற்கு கணக்கீட்டு கணிப்பீடுகளை செய்தல், மதிப்பீடுகள் மற்றும் கணக்கீட்டு தீர்மானங்கள் கணக்குகளில் சீராக்கல் செய்யப்பட்டுள்ளன. கணக்குகளை தயார் செய்யும் சந்தர்ப்பங்களில் புதிய கணக்கீட்டு நியமங்கள் மற்றும் வரியீட்டல் வரைவிலக்கணங்களுக்கு இடையே உறுதியற்ற நிலை காணப்பட்டது.

அருவைச் சொத்துக்களின் பெறுமதி குறைவடைதல்

சொத்துக்களை பயன்படுத்தி உருவாக்கிக் கொள்ளக்கூடிய எதிர்கால காசுப் பாய்ச்சல்களில் மிகவும் சிறந்த மதிப்பீடு அதற்குரிய அபாயங்களுடன் சீராக்கல் செய்யப்பட்டு அருவைச் சொத்துக்கள் விலைமதிப்புச் செய்யப்பட்டுள்ளன. இவ்வாறான விலைமதிப்புக்கள் அடிக்கடி மாற்றமடைய முடியும் என்பதுடன் அவ்வாறு பெறுமதி குறைவடைவதன் மூலம் நட்டம் இனங்காணப்படுமாயின் குறித்த ஆண்டினுள் இலாபத்திற்கு எதிராக பதிவழிப்புச் செய்யப்படல் வேண்டும்.

4. பிரதான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு

4.1 வெளிநாட்டு வியாபாரக் கொடுக்கல் வாங்கல்கள்

வெளிநாட்டு வியாபாரக் கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதிகள் கொடுக்கல் வாங்கல்களின் திகதியில் காணப்பட்ட செலாவணி விகிதத்துக்கு அமைய கணக்குகளில் பதிவு செய்யப்படும். அந்நியச் செலாவணி மூலமான நிதிச் சொத்துக்கள் ஐந்தொகை திகதியில் காணப்பட்ட செலாவணி விகிதத்துக்கு அமைய பரிமாற்றம் செய்யப்படும். முன்னைய காலப்பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட நிதியல்லாத விடயங்களை பரிமாற்றம் செய்யும் திகதியில் காணப்பட்ட விகிதங்களின் கீழ் பரிமாற்றம் செய்யப்படும். வெளிநாட்டு வியாபார கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்யும் போது ஏற்படுகின்ற செலாவணி பரிமாற் இலாபம் மற்றும் நட்டம் வருமானத்தில் சீராக்கல் செய்யப்படும்.

4.2 வரி

இன்றைய வரி

வருமான வரி ஒதுக்கம் நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்ற இலாபத்திற்கு 2006 இன் 06 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சீராக்கல்களை செய்த பின்னர் கணிப்பீடு செய்யப்படும்.

பிற்போடப்பட்ட வரி

பிற்போடப்பட்ட வரியீட்டல் பொறுப்பு முறையைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படுவதுடன், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களில் முன்கொண்டு செல்லும் பெறுமதிகளில் தற்காலிக மாற்றங்கள் ஒதுக்கத்துக்கு மேற்கொள்ளப்படும். சொத்துக்களின் பதிவழிப்புச் செய்யப்பட்ட கணக்கீட்டுப் பெறுமதிக்கு மற்றும் வரி பதிவழிப்பு பெறுமதிக்கு இடையிலான மாற்றத்துக்கு மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடு, ஓய்வூதியப் பயன்களை ஒதுக்குவதற்கு மேற்கொள்ளப்படும் கணிப்பீட்டுக்கு சீராக்கல் செய்யப்பட்டுள்ளது.

சகல பேணிவரப்படுகின்ற பெறுமதிகளின் தற்காலிக மாற்றங்களுக்கு பிற்போடப்பட்ட வரி ஒதுக்கம் செய்யப்படுவதுடன், பதிலீடு செய்ய முடியாது போன வரியீட்டல் நட்டங்கள் எதிர்காலத்தில் வரியீட்டல் இலாபத்திலிருந்து ஈடுசெய்துகொள்வதற்காக முன்கொண்டு செல்லப்படுகின்றன.

பிற்போடப்பட்ட வரி சொத்துக்கள் ஒவ்வொரு ஐந்தொகை திகதியிலும் பின்னாய்வு செய்யப்பட்டு அவற்றிலிருந்து உள்வாங்கிக் கொள்ள வேண்டிய அளவிலான பகுதிகள் அல்லது முழுமையாக வரியீட்டல் இலாபத்திலிருந்து ஈடு செய்துகொள்ளப்படும்.

4.3 ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

நிர்ணயிக்கும் அடிப்படை

இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இற்கமைய மற்றும் மேற்படி சொத்துக்களை பயன்படுத்துவதனால் நிறுவனத்திற்கு ஏற்படுகின்ற எதிர்கால பொருளாதார பயன்களை கணிப்பீடு செய்வதன் மூலம் சொத்துக்களின் பெறுமதி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கணிப்பீடு செய்யும் அடிப்படை

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் செலவினம் அல்லது விலைமதிப்புப் பெறுமதியில் சேர்க்கப்பட்ட தேய்மானம் மற்றும் பெறுமதி குறைவை குறைத்து பெறுமதி காட்டப்பட்டுள்ளது. ஆதனம், பொறி, உபகரணங்களின் பெறுமதி குறைவதற்குக் காரணமாகும் காரணிகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களில் அடிக்கடி ஆராய்ந்துபார்த்து உரிய சீராக்கல்கள் செய்யப்படுகின்றன. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை மீள்மதிப்பீடு செய்யும் சந்தர்ப்பங்களில் குறித்த பொருளின் சகல சொத்துக்கள் விடயமும் பெறுமதி விலைமதிப்புச் செய்யப்படுகின்றன.

மீள்மதிப்பீடு செய்யப்பட்ட திகதியில் காணப்பட்ட திரட்டிய மீதியின் பெறுமதிகள் ஒன்றுக்கொன்று பதிலீடு செய்யப்பட்டு கிடைக்கின்ற தேறிய பெறுமதி மீள்மதிப்பீட்டு பெறுமதிகளுக்கு இடையிலான வித்தியாசத்தை மீள்மதிப்பீட்டு மிகையாக கணக்குகள் காட்டப்படுகின்றன. மீள்மதிப்பீட்டு சொத்துக்களை விற்பனை செய்யும் போது அது தொடர்பான ஒதுக்கங்களை தடுத்துவைத்துக் கொண்டு இலாபத்துக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

சட்ட ரீதயான அங்கீகாரம்

ஆதனம், பொருட்கள், இயந்திரசாதனம் மற்றும் உபகரணங்கள் சட்டத்திற்கு அமைய பதிலீடு செய்த பின்னர் ஏற்றுக் கொள்ள அல்லது அகற்றுவதற்கு அல்லது எதிர்காலத்தில் கிடைக்கும் பயன்களை எதிர்பார்க்க முடியும். சட்டத்திற்கு அமைய அங்கீகரிக்கப்படுவதன் காரணமாக இடம்பெறுகின்ற நட்டம் மற்றும் இலாபம் குறித்த ஆண்டின் வருமானக் கூற்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பெறுமானத் தேய்வு

அடிப்படை முறையியலுக்கு அமைய செலவினம் அல்லது மொத்த சொத்துக்களின் கொள்ளவு, இயந்திரசாதனங்கள் மற்றும் உபகரணங்கள் மற்றும் காணிகள் தவிர, இத்தொகைகளை பதிவழிப்புச் செய்வது பற்றி விலைமதிப்புச் செய்வது பொருளாதார சொத்துக்களுக்கு அமைய மேற்கொள்ளப்படுகின்றது.

மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களின் பெறுமானத் தேய்வானது மேற்கொள்ளப்பட வேண்டியது எஞ்சிய ஆயுற் காலத்திற்குள் தேவையான பொருளாதார சொத்துக்கள் ஒவ்வொரு பொருட்களையும் பயன்படுத்துவதன் அடிப்படையிலாகும்.

பெறுமானத் தேய்வு இடம்பெறுவது புதிய செலவினம் சேர்க்கப்படுவதன் அடிப்படையில் ஏற்படுகின்ற பின்வரும் முறைக்கு அமையவாகும்.

ஆதனம்	வருடாந்த தேய்வு %
கட்டிடம்	05.00
வாகனம்	25.00
சிலிண்டர் மற்றும் $ கொள்கலன்	12.50
கருவிகள் $உபகரணம்	12.50
அலுவலக உபகரணம்	12.50
தளபாடம் ¬ உபகரணம்	12.50
பொறியும், இயந்திரசாதனமும்	12.50
கணினி – உதிரிபாகங்கள்	33.33
தொடர்பாடல் பரிமாற்றம் மற்றும் தொடர்புசாதன உபகரணங்கள்	33.33
மிதிவண்டி	12.50

4.4 நிதிச் செயலாற்றுகைக் கூற்று – ஆரம்ப அறிமுகம் மற்றும் பிந்திய மதிப்பீடு

நிதிச் சொத்துக்கள்

ஆரம்ப அறிமுகம் மற்றும் பிந்திய மதிப்பீடு

LKAS 39 இற்கமைய விடய ரீதியாக வகைப்படுத்தப்பட்டிருப்பது நிதிச் சொத்துக்களின் இலாபம் அல்லது நட்டத்துக்கு அமைய, கடன் வசதிகள் மற்றும் மீளப் பெறுகை, முதலீடு செய்யப்பட்ட தொகை முதிர்ச்சியடைதல், நிதிச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கு ஈடுபடுத்தல் என்ற வகையிலாகும். அடிப்படை அறிமுகத்தின் போது கம்பனி தமது நிதிச் சொத்துக்களுக்கு அமைய வகைப்படுத்தல் பற்றி நிர்ணயிக்கின்றது.

கம்பனியின் நிதிச் சொத்துக்களில் காசு, குறுங்கால வைப்புக்கள், வர்த்தக மற்றும் ஏனைய பெறுகைகள், கடன் வசதிகள் மற்றும் ஏனைய பெறுகைகள் உள்ளடங்கும்.

பிந்திய மதிப்பீடு

நிதிச் சொத்துக்களை மதிப்பீடு செய்யும் போது அவர்களின் சொத்துக்களை வகைப்படுத்துவது பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கடன் மற்றும் மீளப் பெறுகை

கடன் மற்றும் மீளப் பெறுகை என்பது யாதாயினுமொன்றிலிருந்து கிடைக்காத நிதிச் சொத்துக்களின் நிலையான அல்லது நிர்ணயிக்கப்பட்ட கொடுப்பனவாக செயற்படு சந்தையில் குறிப்பிடப்படவில்லை. ஆரம்ப மதிப்பீட்டின் பின்னர் இவ்வாறான நிதிச் சொத்துக்களை மேற்படி விலையில் ஈடு செய்வதற்கும், மற்றும் EIR முறை அமுலுக்குவரும் வகையில் வட்டியைக் குறைப்பதும் இடம்பெறும். ஈடு செய்யும் விலைகளை கணிப்பிடும் போது யாதாயினும் குறைத்தல் அல்லது தவணையை பெற்றுக் கொள்ளும் போது அல்லது மற்றும் கட்டணம் அல்லது விலைமனுக்கள் தொடர்ச்சியாக EIR இன் பகுதியாக மாறுவதாகும். இந்த EIR ஈடு செய்வது நிதி வருமானமாக வருமானக் கூற்றில் உட்புகுத்தப்பட்டுள்ளது. நீக்கம் செய்யும் போது ஏற்படும் நட்டம் வருமானக் கூற்றில் ஏற்றுக் கொள்ளப்பட்டதொரு விடயமாக உள்ளடங்கியுள்ளது.

நிதிப் பொறுப்புக்கள்

அடிப்படை அறிமுகம் மற்றும் பிந்திய மதிப்பீடு

LKAS 39 இல் உள்ளடங்கும் பொறுப்புக்கள் வகைப்படுத்தப்பட்டிருப்பது இலாபம் அல்லது நட்டம், கடன் வழங்குதல் மற்றும் கடன் பெற்றுக் கொள்வதும் என்ற வகையிலாகும். பிரதான இனங்காணுவதில் இந்த வகைப்படுத்தல்கள் நிதிப் பொறுப்புக்களாக கம்பனியினால் இனங்காணப்படுகின்றன.

முக்கியமாக இனங்காணப்பட்டுள்ள நியாயமான பெறுமதியைக் கொண்ட நிதிப் பொறுப்புக்கள், கடன் வழங்குதல் மற்றும் கடன் பெற்றுக் கொள்வது முறையாக ஈடு செய்யப்பட்டுள்ளது. இதில் தாமதிக்காது உட்புகுத்த வேண்டிய கொடுக்கல் வாங்கல் பெறுமதிகளும் உட்புகுத்தப்பட்டுள்ளன.

தொகைகள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள் கம்பனியின் நிதிப் பொறுப்புக்களில் உள்ளடங்கும்.

4.5 ஆவணங்கள்

ஆவணங்கள் விலை மதிப்புச் செய்யப்பட்டிருப்பது, பெறுமதிக்கு குறைவாக மற்றும் பருமட்டாக காசாக்கப்படும் பெறுமதிக்கு அமையவாகும். பருமட்டாக காசாக்கும் பெறுமதி விற்பனை விலைமதிப்புத் தொகையின் இறுதியில் குறிப்பிடப்படும் செலவினம் மற்றும் விற்பனைக்கு விலைமதிப்புச் செய்வதாகும்.

4.6 வர்த்தக மற்றும் ஏனைய பெறுகைகள்

கடன்பட்டோர் மற்றும் ஏனைய கிடைக்க வேண்டியவைகளின் விலையை மதிப்பீடு செய்து மிகை ஏற்பாடுகள் ஐயக் கடனாக பெயரிடப்பட்டுள்ளன.

அறவிட முடியாத மற்றும் ஐயக் கடன் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

1 - 2 வருடம்	25&
2 - 3 வருடம்	50%
3 வருடங்களுக்கு மேல்	100%

4.7 நிதி மற்றும் நிதிசார் பெறுபேறு

நிதிக் கூற்றுக்களில் உள்ளடங்கியிருப்பது வங்கியிலுள்ள நிதி, கையிலுள்ள நிதி மற்றும் கூற்றில் செலவினத்திற்கும், நிதி மற்றும் நிதிக் கூற்றிலிருப்பது நிதி மற்றும் குறுங்கால வைப்புக்களும் உள்ளடங்கும்.

4.8 பணிக்கொடைக்கான குறித்த பயன்கள் திட்டம்

குறித்த பயன்கள் திட்டத்திற்கு அமைய ஒரு ஊழியர் ஓய்வு பெறும் போது கிடைக்க வேண்டிய பயன்கள், பொதுவாக அவர் ஓய்வு பெறும் போது சேவையாற்றியிருந்த சேவைக் காலத்திற்கு அமைய தீர்மானிக்கப்படும். கம்பனி ஊழியர் ஒருவருக்கு பணிக்கொடை செலுத்துவது சட்டபூர்வமானதாகும் என்பதுடன், இந்த பணிக்கொடையானது குறித்த பயன்கள் திட்டத்துக்கு அமையவாகும் என்பதை ஏற்றுக் கொள்ளல் வேண்டும். கம்பனி இது தொடர்பில் நிதிக் கூற்றில் விடயங்களை உள்ளடக்கியுள்ளது. இந்த பணிக்கொடையை பெற்றுக் கொடுக்கும் போது இந்தப் பயன்கள் திட்டத்திற்கு அமைய கணிப்பிடும் போது மேற்படி திட்டங்களுக்கு அமைய பணிக்கொடை கணிப்பீடு செய்யப்படுவது எதிர்வுகூறல் செலவு அலகுகளுக்கு அமையவாகும். இந்தக் காலஎல்லைக்குள் இடம்பெறுகின்ற நட்டங்கள் அல்லது இலாபகங்கள் இந்தப் பணிக்கொடைத் தொகைகளை செலுத்தும் போது தாக்கம் செலுத்தும்.

குறித்த பங்களிப்புத் திட்டம் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்

நிதிக் கூற்றுக்களில் விபரங்களுடன் பங்களிப்பை வழங்குவது மேலே குறிப்பிடப்பட்டுள்ள கூற்றில் செலவொன்றாக உழைக்கப்படுகின்ற நிதிக்கு உட்படுகின்றது.

4.9 பொறுப்புக்கள் மற்றும் உடன்படிக்கையில் உள்ளடங்கும் கட்டளை

உள்வரும் வளங்கள் மற்றும் பொருளாதார பயன்களின் கடப்பாடு காரணமாக பழைய சம்பவங்களின் காரணமாக தற்பொது ஏற்பட்டுள்ள இசைவின் கீழ் வெளியிடப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களில் பொறுப்புக்கள் மற்றும் உடன்படிக்கை கட்டளைகள் உட்புகுத்தப்பட்டுள்ளன.

கடன் கொடுத்தோரின் கோரிக்கைகள் மற்றும் மீதிகள் வெளிப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் இன்றைய பொறுப்புக்களாகவும் பதிவேடுகளின் மீதிகள் பதிவேடுகளுக்கு ஒரு வருடத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்படும் போது அவை தற்காலத்திற்கு முன்னரான பொறுப்புக்களாக ஐந்தொகைக்கு அமைய வகைப்படுத்தப்படும்.

4.10 அறிக்கையிடும் காலப் பகுதியின் பின்னர் இடம்பெறும் சம்பவங்கள்

நிதி ஆவணங்களை வெளியிடுவதற்கு தத்துவமளிக்கும் திகதியை அடுத்து இடம்பெறுகின்ற விருப்பம் அல்லது பிரதிகூலமான சம்பவங்களை அறிக்கையிடுவதற்கான காலப்பகுதியின் பின்னர் அல்லது அறிக்கையிடும் காலப்பகுதியின் இறுதியில் இடம்பெற வேண்டும்.

இந்த அறிக்கையிடல் காலப்பகுதியின் பின்னர் இடம்பெறுகின்ற சம்பவங்கள் தொடர்பில் சிந்தித்து திட்டமிட்டு அல்லது வெளிப்படுத்தல்கள் அவசியமான சந்தர்ப்பங்களில் நிதி ஆவணங்களில் மாற்றங்களை செய்ய முடியும்.

4.11 சிலிண்டர்களுக்குப் பெற்றுக் கொள்ளப்பட்ட வைப்புக்களை மீளச் செலுத்தல்

கம்பனியினால் வெளியிடப்பட்ட சிலிண்டர்களுக்கு வாடிக்கையாளர்களிடமிருந்து மீண்டும் கொடுப்பனவு செய்யும் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட வைப்புக்களை சிலிண்டர்களை கையளித்த பின்னர் மீண்டும் செலுத்தப்படும். விநியோகிக்கும் முகவர்களுடன் செய்துகொள்ளப்பட்டுள்ள உடன்படிக்கைகளை

ரத்துச் செய்யும் சந்தர்ப்பத்தில், மீண்டும் வழங்கப்படும் சிலிண்டர்களுக்கு மீண்டும் கொடுப்பனவு செலுத்தப்படும் என்பதுடன், கம்பனிக்குப் பெற்றுத்தராத சிலிண்டர்களுக்கு பெற்றுக் கொள்ளப்பட்ட தொகைகள் கம்பனிக்கு உரித்தாகும்.

4.12 **வருமானங்களை ஏற்றுக் கொள்ளல்**

பொருளாதார பயன்கள் கம்பனிக்கு கிடைப்பதனால் வருமானம் பற்றிய அங்கீகாரம் உள்ளதுடன், இதற்கமைய வருமானம் மற்றும் கூட்டான செலவினம் ஏற்படுதல் அல்லது ஏற்பட முடிதவதை முறையாக உறுதி செய்ய முடியும். வருமானத்தை முறையாக கணிப்பிட முடிவது கிடைத்த வருமானம் அல்லது மொத்த வர்த்தக மட்டம் மற்றும் பெறுமதி சேர் வரி, கம்பனியில் இடம்பெறும் விற்பனை அகற்றப்பட்டதன் பின்னராகும். பின்வரும் விசேட அளவை முறை வருமான அங்கீகாரத்துக்கு பயன்படுத்தப்படுகின்றது.

பொருட்களை விற்பனை செய்தல்

பொருட்களை விற்பனை செய்யும் போது நிறுவனத்தின் முகாமைத்துவம் இந்தப் பொருட்களை வாடிக்கையாளருக்கு உரிமையை சாட்டுதல் செய்த பின்னர் மேற்படி பொருளுக்கான உரிமை இல்லை என்றும் இந்தப் பொருட்கள் தொடர்பில் எந்தவொரு கட்டுப்பாடும் இல்லை என்றும் உறுதி செய்யப்பட்ட பின்னர் இந்த வருமானம் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது.

வியாபார அளவை அடிப்படையாகக் கொண்ட வரி

வியாபார அளவை அடிப்படையாகக் கொண்டுள்ள வரிக்கு பெறுமதி சேர் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி போன்ற வரிகள் விதிக்கப்பட்டுள்ளவாறு முறையாக செலுத்தப்படுகின்றன.

வட்டி வருமானம்

நிகழ்தகவு முறையில் செலவினம் மற்றும் நிதிச் செலவினத்திற்குக் கிடைக்கின்ற வட்டி வகைப்படுத்தலில் விற்பனை, வட்டி வருமானம் அல்லது செலவினத்தை அறிக்கையிடுவதன் அடிப்படையில் தீவிர வட்டி விகிதத்துக்கு அமைய ^EIR& இதன் மூலம் எதிர்கால நிதிசார் கொடுப்பனவுகள் அல்லது பெறுகைகள், நிதிச் செலவினம் காலத்திற்கு ஏற்பட அல்லது குறுங்காலத்திற்கு பொருத்தமானவாறு மொத்த வருமானம் அல்லது பொறுப்பாக இருக்கும். வட்டி வருமானம் நிதி வருமானத்தின் ஒரு பகுதியாக வருமானக் கூற்றில் காட்டப்பட்டுள்ளது.

இலாபம் மற்றும் நட்டம்

கூட்டு வருமானக் கூற்றில் இலாபம் மற்றும் நட்டமாக சுயமாக எழுவது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்கள் மற்றும் ஏனைய வைப்புக்கள் கம்பனியின் விசேட நிதிக் கூற்றில் வெளிப்படுத்தப்பட்டிருப்பது விற்பனை மூலம் கிடைத்த வருமானம் குறைக்கப்பட்டு அவ்வாறான சொத்துக்கள் செலவினங்களுக்கு இணைக்கப்பட்டாகும்.

ஏனைய வருமானங்கள்

ஏனைய வருமானங்களை கணிப்பிட்டு இனங்காண முடியும்.

4.13 **செலவினங்களை இனங்காணல்**

யாதாயினுமொரு பொருளிலிருந்து கிடைக்கின்ற வருமானம் மற்றும் நேரடியான செலவினத்துடன் நேரடியான பங்கேற்பு காரணமாக, விபரங்களுடன் நிதிக் கூற்றில் செலவினத்தை இனங்காண முடியும்.

இந்த விபரங்களைக் கொண்ட கூற்றுக்கு கம்பனிக்கான செலவினம், ஆதனங்களை பராமரிப்புச் செய்தல், இயந்திரசாதனங்கள் மற்றும் கருவிகளை வினைத்திறன்மிக்கவாறு பயன்படுத்தல் ஆகிய செலவினங்கள் அனைத்தும் இந்தக் கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

5. **இலங்கை கணக்கீட்டு நியமம் SLFRS/LKAS வெளியிடப்பட்டுள்ள போதிலும் இதுவரை அமுல்படுத்தப்படவில்லை**

கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ள போதிலும் நியமங்கள் வெளியிடப்பட்டுள்ள போதிலும், அவை அமுலில் இல்லை என்பது மற்றும் கூற்றுக்கள் வெளியிடப்பட்ட திகதி குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. இந்த நியமங்களை அட்டவணைப்படுத்தல் மற்றும் பொருட்கோடல்கள் வெளியிடப்பட்டிருக்கவில்லை என்பதுடன், கம்பனி எதிர்வரும் தினமொன்றில் இது அமுலுக்குவரும் என்று நம்புகின்றது. கம்பனிக்கு இந்த செயன்முறை அமுலுக்குவரும் பட்சத்தில் அவற்றை முறையாக நிறைவேற்றுவதற்கு கட்டுப்பட்டுள்ளது.

அ) SLFRS-9 நிதிக் கூற்றுக்கள் : வகைப்படுத்தல் மற்றும் மதிப்பீடு LKAS 39 விபரிக்கப்பட்டுள்ள நிதிப் பொறுப்புக்கள் நிதிச் சொத்துக்களை அளவிடல் மற்றும் வகைப்படுத்தல் SLFRS 9 எனும் பந்திக்குப் பொறுப்பளிக்கப்படுவதுடன், அவ்வாறே இடம்பெறுகின்றது. இந்த அளவை வருடாந்தம் 2015 சனவரி 01 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. கம்பனியின் நிதிச் சொத்துக்களின் வகைப்படுத்தல் மற்றும் அளவைகள் SLFRS 9 இற்கமைய தாக்கம் செலுத்தும் என்பதுடன், இவற்றில் நிதி வகைப்படுத்தல் அல்லது பொறுப்புக்கூறலுக்கு தாக்கம் செலுத்துவதில்லை.

ஆ) SLFRS 13 நியாயமான விலைமதிப்பீடு - SLFRS 13 இன் கீழ் தனி ஆலோசனையின் கீழ் மூலமொன்றின் அடிப்படையில் நியாயமாக விலை நிர்ணயிக்கப்படுகின்றது.

6. SLFRS/LKAS **ஏற்றுக் கொள்ளல்**

SLFRS/LKAS இற்கமைய தயார் செய்யப்பட்ட ஆரம்ப நிதிக் கூற்றுக்கள் 2012 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்காகும். 2011 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டு மற்றும் அதற்கு முன்னர் இந்த நிதிக் கூற்றுக்கள் தயார் செய்யப்பட்டிருப்பது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமையவாகும் என்பதுடன், இது 2011 டிசம்பர் 31 ஆம் திகதி வரை தத்துவமுள்ளதாகும்.

இதற்கமைய கம்பனி தயார் செய்துள்ள நிதிக் கூற்றுக்கள் SLFRS/LKAS 2011 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு அவ்வாறு இசைவானதாக தத்துவமுள்ளதாக இருக்கும் வகையிலும் மேற்படி SLFRS/LKAS நியமங்களுக்கு உட்பட்டதாகவும், 2012 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கு விபரிக்கப்பட்டுள்ள கணக்கீட்டு நியமங்களுக்கு அமையவாகும். இந்த நிதிக் கூற்றுக்களை தயார் செய்யும் போது கம்பனியின் ஆரம்பக் கூற்றுக்கள் தயார் செய்யப்பட்டிருப்பது 2011 டிசம்பர் 31 ஆம் திகதிக்காகும் என்பதுடன் கம்பனி மாற்றமடைந்திருப்பது 2011 சனவரி 01 ஆம் திகதி தயார் செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களிலாகும். இந்த ஆவணம் கம்பனியினால் மேற்கொள்ளப்பட்ட இசைவான தன்மையை மீண்டும் வெளியிடல் அல்லது பகிரங்கப்படுத்தப்பட்ட 2011 டிசம்பர் 31 ஆம் திகதிய SLAS நிதிக் கூற்றுக்களுடன் சம்பந்தப்பட்டதென்றாகும்.

7. **உடன்படிக்கைகள் தொடர்பில் பணிப்பாளர்கள் கொண்டுள்ள ஊக்கம்**

கம்பனியுடன் உடன்படிக்கைகளை செய்துகொள்வதற்கு அவருக்கு ஊக்கம் இல்லை என்பதை தகைமைவாய்ந்த அதிகாரி உறுதி செய்துள்ளார்.

2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான கணக்குகளுக்கான குறிப்புக்கள்

			2019 ரூபா	2018 ரூபா
1	**வருமானம்**			
	விற்பனை		289,083,702	336,928,395
	குறைக்க : தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி		(1,914,857)	(2,301,290)
			287,168,845	334,627,105
2	**விற்பனைச் செலவினம்**			
	ஆரம்ப இருப்பு		13,194,446	31,060,487
	கூட்டுக : கொள்வனவு		152,166,888	140,058,269
			165,361,334	171,118,756
	குறைக்க : இறுதி இருப்பு		(13,456,985)	(13,194,446)
			151,904,349	157,924,310
3	**ஏனைய செயற்பாட்டு வருமானம்**			
	ஊழியர் கடனுக்கான வட்டி		1,220,756	1,316,564
	நிலையான வைப்புக்கள், ஏனைய வைப்புக்களுக்கான வட்டி		35,816,742	30,309,810
	வேறு வருமானங்கள்		1,440,033	1,652,691
	நிலையான சொத்து விற்பனை மூலம் பெற்ற இலாபம்		-	-
			38,477,530	33,279,066
4	**செயற்பாட்டு இலாபம்**			
	பின்வரும் செலவினங்களுக்கு அறவீடுகள் செய்த பின்னர் செயற்பாட்டு இலாபம் காட்டப்பட்டுள்ளது.			
	தேய்மான ஏற்பாடு		20,433,802	20,077,728
	கணக்காய்வாளர் கட்டணம்		250,000	163,320
	ஊழியர் செலவினம் (குறிப்பு 4.1)			
4.1	**ஊழியர் செலவினம்**			
	சம்பளம், வேதனம் மற்றும் ஏனைய உரிய செலவினங்கள்		42,256,621	44,583,831
	சேவைப் பணிக்கொடை		2,190,511	2,385,822
	ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்		5,289,517	5,512,793
			49,736,649	52,482,446
	பின்வரும் விபரங்கள் மேலே உள்ளடக்கப்பட்டுள்ளது.			
	தவிசாளரின் மற்றும் நிறைவேற்றுப் பணிப்பாளரின் வேதனாதிகள்		-	-
	பணிப்பாளர்களின் கட்டணம்		-	-
5	**வரியீட்டல்**			
	நிகழ்கால வருமான வரி			
	பொதுவான நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்ட நிகழ்கால வருமான வரி	igyk 5.1	11,302,813	11,930,470
	பிற்போடப்பட்ட வருமான வரிக் கட்டணம் / (மீளச்செலுத்தல்)	igyk 5.2	18,889,752	2,459,751
			30,192,565	14,390,221

		2019 ரூபா	2018 ரூபா
5.1	**கணக்கு இலாபம் மற்றும் வரி இலாபத்தை ஒப்பிடுதல்**		
	கணக்குகளுக்கு அமைய தேறிய இலாபம்	73,380,727	74,263,916
	அங்கீகாரம் வழங்க முடியாத செலவினங்களின் கூட்டுத்தொகை	23,195,152	22,950,509
		96,575,879	97,214,425
	அங்கீகாரம் வழங்கக் கூடிய செலவினங்களின் கூட்டுத்தொகை	(52,212,748)	(42,851,001)
	வியாபார இலாபம்	44,363,131	54,363,424
	வட்டி வருமானம்	36,371,245	30,854,222
	முழுமையான நியாயதிக்க வருமானம்	80,734,376	85,217,646
	வரி இலாபம்	11,302,813	11,930,470
		11,930,470	11,930,470

5.2	**பிற்போடப்பட்ட வரிச் செலவினம் / (வருமானம்)**		
	கால மாற்றம் காரணமாக ஒத்திவைக்க வேண்டி ஏற்பட்ட வரிச் செலவினம்	18,955,798	(2,460,601)
	ஒப்பீட்டு ரீதியான வருமானத்திலிருந்த பெற்ற வரி	(66,046)	850
		18,889,752	2,461,451

6 ஒரு பங்குக்கான உழைப்பு

6.1 ஒரு பங்குக்கான ஆரம்ப உழைப்பு கணிப்பிடப்படுவது குறித்த ஆண்டில் செலுத்தப்படாத சாதாரண பங்குகளின் எண்ணிக்கையின் சராசரியிலிருந்து சாதாரண பங்குதாரர்களுக்கு உரித்தானதாகக் கருதப்படுகின்ற குறித்த ஆண்டுக்கான தேறிய இலாபத்தை பகிர்ந்தளிப்பதன் மூலமாகும். பணிக்கொடை சிக்கல்கள் போன்ற, வளங்களுக்கு சமாந்தரமான மாற்றம் இன்றி செலுத்தப்படாத சாதாரண பங்குகளின் எண்ணிக்கை மாற்றங்களுக்கு உட்படுத்தப்பட்ட சம்பவங்களுக்கு இந்த ஆண்டில் மற்றும் முன்னைய ஆண்டில் செலுத்தப்படாத சாதாரண பங்குகள் எண்ணிக்கையின் சராசரிக்கு சீராக்கல் செய்யப்படுகின்றது.

6.2 2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான பங்குகளை கணிப்பிடுவது அடிப்படை உழைப்புக்களின் போது பயன்படுத்தப்பட்ட வருமானம் மற்றும் பங்குகளின் தரவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

	2019 ரூபா	2018 ரூபா
பெறுமானங்களாக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட அளவுகள்		
தேறிய இலாபம் / (நட்டம்)	43,593,872	59,869,311
ஒரு பங்குக்கான உழைப்புக்காக சாதாரண பங்குரிமையாளர்களுக்கு உரித்தானதாகக் கருதப்படும் தேறிய இலாபம்	43,593,872	59,869,311
பெறுமானங்களாக பயன்படுத்திக் கொள்ளப்பட்ட சாதாரண பங்குகளின் எண்ணிக்கை		
ஒரு பங்கின் அடிப்படை உழைப்பு தொடர்பில் வெளியிடப்பட்ட சாதாரண பங்குகளின் எண்ணிக்கையின் சராசரி	4,000,000	4,000,000
	4,000,000	4,000,000
ஒரு பங்கின் உழைப்பு	10.90	14.97

7 ஒரு பங்குக்கான பங்கிலாபம்

பெறுமானங்களாக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட அளவுகள்		
ஆண்டுக்கான பங்கிலாபம்	3,000,000	10,000,000
பெறுமானங்களாக பயன்படுத்திக் கொள்ளப்பட்ட சாதாரண பங்குகளின் எண்ணிக்கை		
ஒரு பங்கின் பங்கிலாபம் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள சாதாரண பங்குகள்	4,000,000	4,000,000
ஒரு பங்கின் பங்கிலாபம்	0.75	2.50

8 ஆதனம், சொத்து மற்றும் உபகரணம்

சொத்துக்களின் விபரம்	செலவினம்/ விலைமதிப்பீடு				தேய்மானம்				W.D.V	W.D.V
	2019.01.01 ஆம் திகதிக்கு மீதி	ஆண்டில் கொள்வனவு	அகற்றல்	2019.12.31 ஆம் திகதிக்கு மீதி	2019.01.01 ஆம் திகதிக்கு மீதி	ஆண்டுக்கு	அகற்றல் அடிப்படையில்	2019.12.31 ஆம் திகதிக்கு மீதி	2019.01.01 ஆம் திகதிக்கு மீதி	2019.12.31 ஆம் திகதிக்கு மீதி
காணி	70,000,000	-	-	70,000,000	-	-	-	-	70,000,000	70,000,000
கட்டிடம்	51,493,569	12,781,945	-	64,275,514	7,801,011	2,335,630	-	10,136,641	13,692,558	54,138,873
பொறியும், இயந்திரசாதனங்களும்	14,183,722	1,100,569	-	15,284,291	6,353,058	1,809,513	-	8,162,571	7,830,664	7,121,719
தளபாடமும், பொருத்தல்களும்	3,052,176	-	-	3,052,176	1,843,972	218,172	-	2,062,144	1,208,244	990,032
அலுவலக உபகரணம்	3,369,362	2,009,071	-	5,378,433	2,364,390	318,863	-	2,683,253	1,004,972	2,695,180
கணினி	4,443,183	296,050	-	4,739,233	3,341,612	613,391	-	3,955,543	1,101,571	783,690
மோட்டார் வாகனம்	34,935,915	-	-	34,935,915	33,168,668	1,461,667	-	34,630,335	1,767,247	305,580
கொள்கலன் மற்றும் சிலிண்டர்	229,032,549	15,244,484	-	244,277,033	79,258,791	13,494,568	-	92,753,359	149,773,758	151,523,673
கருவிகள் மற்றும் உபகரணங்கள்	1,094,758	237,430	-	1,332,188	483,071	128,845	-	611,916	611,687	720,272
தொடர்பாடல் மற்றும் மருத்துவ உபகரணங்கள்	426,598	30,000	-	456,598	382,563	52,612	-	433,175	44,035	21,423
	412,031,832	31,699,548	-	443,731,380	134,997,136	20,433,802	-	155,430,938	277,034,696	288,300,442

		2019 ரூபா	2018 ரூபா
9	**தற்போதைய இருப்பு**		
	திரவ குளோரின் - 900 கி.கி.	9,698,778	4,833,798
	திரவ குளோரின் - 68 கி.கி.	218,374	424,395
	கோஸ்ரிக் சோடா	2,200,716	7,244,312
	ஹைட்ரோகுளோரிக் அமிலம்	1,339,118	691,491
	பிளீசின் திரவம்	-	-
		13,456,986	13,194,446
	வேறு இருப்புக்கள்		
	குளோரின் வேல்வ் - ஸ்பின்டில்ஸ், வொசஸ், புரொரெக்டர்ஸ், ஸ்பெனர்ஸ் மற்றும் வேல்வ்ஸ் கம்பலீட்	12,023,243	11,398,201
	புரொரெக்ரிவ் ஹுட்ஸ்	-	-
	அவசர சந்தர்ப்பங்களுக்கான உபகரணத் தொகுதி	-	-
	எழுதுகருவிகள்	-	-
		12,023,243	11,398,201
		25,480,229	24,592,647
10	**குறுங்கால முதலீடுகள்**		
	நிலையான வைப்பு – மக்கள் வங்கி	45,808,605	41,691,061
	நிலையான வைப்பு – மக்கள் வங்கி	52,203,327	47,710,032
	நிலையான வைப்பு – மக்கள் வங்கி	13,508,230	12,272,975
	நிலையான வைப்பு – மக்கள் வங்கி	7,016,211	6,401,371
	நிலையான வைப்பு – மக்கள் வங்கி	13,769,796	12,563,131
	நிலையான வைப்பு – மக்கள் வங்கி	13,856,798	12,589,669
	நிலையான வைப்பு – மக்கள் வங்கி	13,476,808	12,295,818
	நிலையான வைப்பு – மக்கள் வங்கி	14,314,470	13,066,489
	நிலையான வைப்பு – மக்கள் வங்கி	13,768,229	12,567,871
	நிலையான வைப்பு – மக்கள் வங்கி	7,023,148	6,410,848
	நிலையான வைப்பு – மக்கள் வங்கி	7,871,072	7,193,585
	நிலையான வைப்பு – மக்கள் வங்கி	12,701,926	11,609,191
	நிலையான வைப்பு – மக்கள் வங்கி	12,775,626	11,607,364
	நிலையான வைப்பு – மக்கள் வங்கி	13,067,592	11,943,398
	நிலையான வைப்பு – மக்கள் வங்கி	12,335,585	11,273,825
	நிலையான வைப்பு – மக்கள் வங்கி	12,302,741	11,122,128
	நிலையான வைப்பு – மக்கள் வங்கி	23,475,295	21,036,411
	நிலையான வைப்பு – மக்கள் வங்கி	35,115,470	31,607,517
	நிலையான வைப்பு – மக்கள் வங்கி	22,088,944	20,000,000
	நிலையான வைப்பு – மக்கள் வங்கி	10,489,352	-
	நிலையான வைப்பு – மக்கள் வங்கி	10,442,449	-
	நிலையான வைப்பு – தேசிய சேமிப்பு வங்கி	10,197,838	-
	நிலையான வைப்பு – தேசிய சேமிப்பு வங்கி	10,197,838	-
		387,807,350	314,962,684
11	**பிரகடனம் செய்யப்பட்ட முலதனம்** **உள்ளடங்குவது**		
	வெளிப்படுத்தியுள்ளவாறு மூலதனம்		
	4,000,000 சாதாரண பங்குகள் குறிப்பு 11.1	40,000,000	40,000,000

12 உரிமைகளின் வேறு கூறுகள்

ஆதனம், பொறி மற்றும் இயந்திரசாதனங்களின் மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்

ஆண்டின் ஆரம்ப மீதி	220,795,490	220,795,490
ஆண்டில் மீள்மதிப்பீட்டு மிகை		-
மீள்மதிப்பீடுகளை மீளத்திருப்புதல்		
ஆண்டின் இறுதி மீதி	220,795,490	220,795,490

2010.12.31 ஆம் திகதிக்கு ஆனதம், பொறி மற்றும் உபகரணங்களில் காணப்பட்ட நியாயமான பெறுமதியை தீர்மானிப்பதற்கு கம்பனி ஆண்டினுள் அரசாங்க விலைமதிப்புத் திணைக்களத்தினூடாக விலைமதிப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொண்டுள்ளது. 2010.12.31 ஆம் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில் நிதிக் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதிகள் அரசாங்க விலைமதிப்புத் திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பெறுமதிகளை அடிப்படையாகக் கொள்ளப்பட்டவையாகும்.

சொத்துக்கள்	2010.12.31 திகதிக்கு தேறிய பேணிவரப்படும் பெறுமதி ரூபா	2010.12.31 ஆம் திகதிக்கு மீள்மதிப்பீட்டு பெறுமதிகள் ரூபா	மீள் மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா
காணி	538,000	70,000,000	69,462,000
பொறியும், இயந்திரசாதனமும்	181,790	1,138,000	956,210
தளபாடம் மற்றும் பொருத்தல்கள்	1,208,140	1,925,000	716,860
அலுவலக உபகரணம்	461,909	1,511,700	1,049,791
கணினி உதிரி பாகங்கள்	741,648	916,850	175,202
மோட்டார் வாகனம்	192,128	12,195,037	12,002,909
மிதி வண்டி	1	2,500	2,499
சிலிண்டர்	36,892,075	173,033,000	136,140,925
உபகரணம் மற்றும் அம்சங்கள்	30,216	319,310	289,094
	40,245,907	261,041,397	220,795,490

13 ஓய்வூதியப் பயன்களின் கடப்பாடு

பணிக்கொடைக்கான ஏற்பாடு

2019.01.01 ஆம் திகதிக்கு மீதி	12,932,769	11,529,723
ஏற்பாடுகளின் கீழ்	-	-
ஆண்டினுள் கொடுப்பனவு	955,425	1,044,813
ஆண்டினுள் வட்டி வருமானம்	1,235,087	1,341,010
ஒப்பீட்டு ரீதியான வருமானக் கூற்றுக்கு ஒதுக்கம்	15,123,281	2,385,823
வேறு ஒப்பீட்டு ரீதியான வருமானக் கூற்றுக்கு ஒதுக்கம் உண்மையான நட்டம்		
நட்டம்	(471,756)	3,535
குறைக்க – ஆண்டினுள் காசாக செலுத்தல்	(3,623,443)	(986,312)
ஆண்டின் இறுதியில் மீதி	11,028,082	12,932,769

13.1 2019.12.31 ஆம் திகதிக்கு குறித்த பயன்களின் பொறுப்புக்களின் பெறுமதியை நிர்ணயிப்பதற்கு பயன்படுத்திக் கொள்ளப்பட்ட அளவைகள் பின்வருமாறாகும்.

	2019	2018
கழிவு விகிதம்	12%	12%
வருடாந்த சம்பள ஏற்ற விகிதம்	10%	10%
பதவியணி புரள்வு	5%	5%

		2019 ரூபா	2018 ரூபா
14	**பிற்போடப்பட்ட வரி**		
	2019.01.01 ஆம் திகதிக்கு நிலுவை	42,135,985	39,675,384
	ஆண்டுக்குரிய மாற்றல்கள்	18,955,798	2,460,601
	2019.12.31 ஆம் திகதிக்கு மீதி	61,091,783	42,135,985

15 எதிர்பாராத பொறுப்புக்கள்

தொகை ரீதியாக குறிப்பிடத்தக்களவு எந்தவொரு எதிர்பாராத பொறுப்பும் ஐந்தொகைக்கு வரவில்லை.

16 ஐந்தொகை திகதியின் பின்னரான சம்பவங்கள்

சீராக்கல்கள் அல்லது ஈடுசெய்தல்களுக்குத் தேவையான சம்பவங்கள் எதுவும் ஐந்தொகை திகதி முதல் இந்த அறிக்கையின் திகதி வரை எழுந்திருக்கவில்லை.

17 வெளிப்படுத்தல்கள்

மீள்நிரப்பல் செயன்முறை

ஆண்டினுள் களுத்துறை நாகொட மீள்நிரப்பல் பிரிவில் இடம்பெற்ற குளோரின் கசிவு காரணமாக குறித்த மீள் நிரப்பல் பணியை ஹொரனை கைத்தொழில் பிரிவில் அமைந்துள்ள புதியதொரு இடத்திற்கு மாற்ற வேண்டி ஏற்பட்டது. இதற்காக ரூ.மி. 7.2 ஆன தொகை செலவிடப்பட்டது. இந்த இடத்தில் இடம்பெற்ற மாற்றம் காரணமாக பருமட்டான இலாபம் குறைவடைய தாக்கம் ஏற்பட்டுள்ளது.

18 ஒரு பங்கின் பங்கிலாபம்

டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கு

	2019 ரூபா	2018 ரூபா
பிரகடனம் செய்த இறுதி பங்கிலாபம்	3,000,000	10,000,000
சாதாரண பங்குகளுக்கு அமைய எண்ணிக்கை	4,000,000	4,000,000
ஒரு பங்கின் பங்கிலாபம்	0.75	2.5

2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டில் ஒரு பங்குக்கு 4,000,000 ஆரம்ப மற்றும் இறுதிப் பங்கிலாபமாக ரூபா 2.75/- ஐ பணிப்பாளர் சபை சிபாரிசு செய்துள்ளது. இலங்கை கணக்கீட்டு நியமனம் (SLFR/LKAS) இன் இலக்கம் 10 இற்கமைய இது வருடாந்த பொதுக் கூட்டத்தின் போது பங்குதாரர்களின் அங்கீகாரத்துடன் நிறைவேற்றப்படல் வேண்டும். இறுதி கணக்கீட்டின் பின்னர் உத்தேச மேற்படி பங்கிலாபம் பிரகடனம் செய்யப்படும். எனினும் 2019 டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு பொறுப்பொன்றாக அங்கீகரிக்கப்படுவதில்லை.

நிறுவன ரீதியான திட்டம் - உபாயமுறையிலான வியாபார அலகு

உபாயமுறையிலான வியாபார அம்சங்கள்



உபாயமுறையிலான இலக்குகள்

தரப்பினர்கள் / சேவைகள்

- நீர் சுத்திகரிப்பு செயன்முறை
- இறப்பார் சார்ந்த உற்பத்திகள்
- சவர்க்காரம் மற்றும் கிருமிநாசினி உற்பத்தி
- ஆடை உற்பத்திக் கைத்தொழில்
- நீச்சல் தடாகங்களை சுத்தம் செய்யும் இரசாயனங்களை வழங்குதல்
- குடிபானம் மற்றும் உணவு பொதிகளை சுத்தம் செய்பவை
- கடதாசி உற்பத்தி செயன்முறை
- கெல்வனைஸ் கைத்தொழில்
- இந்திய, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேச வழங்குனர்கள் பங்காளர்கள்

நிறுவன ஒழுங்கமைப்பு



குறிப்பு

தற்போது கம்பனியின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் வெளியாரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றது. (உள்ளகக் கணக்காய்வாளர் கே. லியனகே என்ட் கம்பனி பட்டயம் பெற்ற கணக்காளர்)

2018, 2019 ஆம் ஆண்டுகளுக்கான செயற்பாட்டு மற்றும் நிதித் தகவல்கள் மற்றும் 2020 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத்திட்ட தகவல்கள்

2018, 2019 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டு மற்றும் நிதிசார் தகவல்கள் மற்றும் 20120 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட தகவல்கள்

	2018 உண்மை ரூபா '000	2019 உண்மை ரூபா '000	2020 வரவு வரவு செலவுத்திட்ட ரூபா '000
நடைமுறையல்லா சொத்துக்கள்	294,192	299,081	492,872
நடைமுறை சொத்துக்கள்	428,844	494,810	331,658
மொத்த சொத்துக்கள்	723,036	793,890	824,530
உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்			
மூலதனம் மற்றும் ஒதுக்கம்			
பங்குரிமை	618,566	662,160	638,530
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்	55,069	72,120	85,000
நடைமுறை பொறுப்புக்கள்	49,401	59,610	101,000
மொத்த பங்குகள், பொறுப்புக்கள்	723,036	793,890	824,530
வருமானம்	302,627	287,169	326,090
விற்பனை செலவினம்	(157,924)	(151,904)	(133,179)
மொத்த இலாபம் $(நட்டம்)	144,703	135,264	192,911
ஏனைய செயற்பாட்டு வருமானம்	177,982	173,742	228,911
நடவடிக்கைகளிலிருந்தான இலாபம் / (நட்டம்)	74,513	73,633	100,300
வரிக்கு முன்னரான இலாபம் / (நட்டம்)	74,263	73,381	100,000
வரிக்குப் பிந்திய தேறிய இலாபம் / (நட்டம்)	59,874	43,188	89,000
ஒரு பங்கின் உழைப்பு	14.97	10.80	22.25
ஒரு பங்கின் பங்கிலாபம்	2.50	0.75	5.00

கம்பனியின் செயலாற்றுகையை மதிப்பீடு செய்தல்

கொழும்பு 13, ஸ்ரீ ராமநாதன் மாவத்தையில், துறைமுக அதிகாரசபையிடம் குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டிடமொன்றில் தமது தலைமை அலுவலகம் மற்றும் கோஸ்ரிக் சோடா மற்றும் ஹைட்ரோகுளோரிக் அமிலம் களஞ்சியத்தை பேணிவருகின்றது.

கம்பனியின் பிரதான செயற்பணியாக நாட்டினதும், சந்தையினதும் தேவைகளுக்கு அமைய குளோரின், கோஸ்ரிக் சோடா மற்றும் ஹைட்ரோகுளோரிக் அமிலத்தை இந்தியா, பங்களாதேஷ் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து விற்பனை செய்வதை அறிமுகம் செய்ய முடியும்.

குளோரின் களஞ்சியப்படுத்தும் நடவடிக்கைகள் மிகவும் பாதுகாப்பான முறையில் சனநெரிசல் இல்லாத இடங்களில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கையாக உள்ளதனால் களுத்துறை மாவட்டத்திற்கு உரித்தான ஹொரனை கைத்தொழில் பேட்டையில் களஞ்சியமொன்று பேணிவரப்படுகின்றது.

ஹொரனை கைத்தொழில் பேட்டையில் பேணிவரப்படுகின்ற இந்த சிலிண்டர்களை களஞ்சியப்படுத்தும் நடவடிக்கைகள் காரணமாக எமது நிறுவனத்திற்கு பாரியளவு நிதியை தனியார் நிறுவனமொன்றுக்கு செலுத்த வேண்டி ஏற்பட்டது. இதனால் நிறுவனம் சமர்ப்பித்த கேரிக்கையை கவனத்தில் கொண்ட கைத்தொழில் அபிவிருத்தி கௌரவ அமைச்சர் குமார வெல்கம அவர்கள் முன்வைத்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைய, மேன்மைதங்கிய சனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் மகிந்த சிந்தனை எண்ணக்கருவை அமுல்படுத்தும் வகையில் 2006.11.22 ஆம் திகதி அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் களுத்துறை புலர்டன் கைத்தொழில் பேட்டையில் இரண்டு ஏக்கர் காணி (காணித்துண்டு இலக்கம் 558 1$2 மற்றும் 558 2$2) நீண்டகால குத்தகை அடிப்படையில் பரந்தன் கெமிகல்ஸ் கம்பனிக்கு (2009 நவம்பர் 29 ஆம் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில்) வழங்கப்பட்டது.

2008 ஆம் ஆண்டு மே மாதம் 01 ஆம் திகதி முதல் களுத்துறை புலர்டன் கைத்தொழில் பேட்டையில் 900 கி.கி. சிலிண்டர்கள் முதல் 68 கி.கி. சிலிண்டர்களுக்கு குளோரின் மீள்நிரப்புவது ஆரம்பிக்கப்பட்டது. இந்த புதிய நடவடிக்கையை அடுத்து தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டு வந்த பாரியளவு நிதியை சேமித்துக் கொள்ள முடிந்தது. குறிப்பாக 2010 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கு ரூ.மி. 32.015 ஆன வரிக்கு முன்னரான இலாபத்தையும், 2011 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கு ரூ.மி. 37.16 ஆன வரிக்கு முன்னரான இலாபத்தையும் உழைத்துக் கொள்ள முடிந்தது.

கம்பனி தெரிவு செய்துகொண்ட புதிய இரசாயனப் பதார்த்தங்கள் சிலவற்றை விற்பனை செய்வதை 2012 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் ஆரம்பிக்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அண்மைக் காலத்தில் களுத்துறை புலர்டன் பிரிவில் இடம்பெற்ற குளோரின் கசிவை அடுத்து நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் ஏற்பட்ட பாரிய தாக்கம் காரணமாக அதனை ஒத்திவைக்கத் தீர்மானிக்கப்பட்டது.

2012 ஆம் ஆண்டு களுத்துறை பிரிவில் இடம்பெற்ற குளோரின் கசிவை அடுத்து அப்பணிக்கு உகந்த இடமொன்றை தேடிப் பெற்றுக் கொள்ள கம்பனிக்கு முடியவில்லை. இதன் காரணமாக 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்ட புதிய இரசாயன பதார்த்தங்களின் உற்பத்தியை ஒத்திவைக்க வேண்டி ஏற்பட்டது. இது கம்பனியின் இலாபத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. எனினும் இந்த ஆண்டின் ஆரம்ப பகுதியில் இலங்கை முதலீட்டு சபைக்கு உரித்தான 2 1$2 ஏக்கர் அளவான காணி ஹொரணை வகவத்த கைத்தொழில் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ள முடிந்ததுடன், அதற்கமைய குளோரின் மீள்நிரப்பல் பிரிவை அவ்விடத்தில் தாபிக்கத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கனிசமானளவு தொழில்வாய்ப்புக்கள் உருவாக்கப்படுவதன் காரணமாக நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்பு வழங்கும் ஆற்றலும் இதன் மூலம் கிடைக்கும்.

குளோரின் விநியோகத்தின் தொடர்ச்சியான தன்மையை உறுதி செய்வதற்காக கம்பனி மீள்நிரப்பும் பிரிவை தாபிப்பதற்கு தகுந்த மாற்று இடமொன்றை தேடிப் பெற்றுக் கொள்ளும் பணியில் தற்போது ஈடுபட்டுள்ளது. எவ்வாறாயினும், தற்காலிக அடிப்படையில் ஹொரணை பிரதேசத்தில் வெளி நிரப்பும் வழங்குநர்களின் சேவையைப் பெற்றுக் கொள்ள தற்போது நிறுவனத்திற்கு ஏற்பட்டுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற குளோரின் கசிவு காரணமாக நிரப்பும் இடங்களில் இடம்பெற்ற மாற்றங்கள் காரணமாக கம்பனிக்கு ரூபா மில்லியன் 7.2 ஆன நிதிசார் நட்டம் ஏற்பட்டது.

நிறுவனம்சார் நல்லாட்சி

பரந்தன் கெமிகல்ஸ் கம்பனியானது, உயர் நல்லாட்சிக் கொள்கைகளை அமுல்படுத்துவதற்கு கடும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்ற நிறுவனமொன்றாகும். நல்லாட்சி எண்ணக்கரு பிரதானமாக நிறுவனத்தின் கொள்கைகள், நடைமுறை மற்றும் ஊழியர்களை பொதுவான விதிகளுடன் தொடர்புபடுத்தி கம்பனியின் பங்குதாரர்கள் மற்றும் விருப்பம் கொண்ட தரப்பினர்களின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்கான எண்ணக்கருவாகும். நல்ல முகாமைத்துவம், நன்னெறிகளை பாதுகாத்துக் கொள்வதற்கும், முகாமைத்துவம் மற்றும் வியாபார நிருவாகத்திற்கும் மற்றும் அதன் தரப்பினர்களுக்கும் உயர் பயன்களைப் பெற்றுக் கொடுக்க வழிவகுக்கின்றது. மேலும் சேவைகளின் வகைப்பொறுப்புக்கூறலும் நல்லாட்சிக் கொள்கைகளின் ஒரு அம்சமாகும்.

இலங்கை பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகம் மற்றும் அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட நல்லாட்சி பற்றிய விதிகள் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் மற்றும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிசார் விதிகள் தொடர்பில் எமது கம்பனி வெளிப்படுத்தும் இணங்கியொழுகுதலானது இந்த நிறுவனம்சார் நல்லாட்சி பற்றிய அறிக்கையிலும், பணிப்பாளர்களின் அறிக்கையிலும், கணக்காய்வுக் குழு அறிக்கையிலும் நல்ல முறையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபை

நிறுவனத்தின் முன்னேற்றம் மற்றும் வெற்றிகரமான நிலைமை தொடர்பான பிரதான பொறுப்பை பணிப்பாளர் சபை கூட்டாக ஏற்றுக் கொள்கின்றது. பணிப்பாளர் சபையின் செயற்பணியான தொழில்முயற்சிசார் தலைமைத்துவத்தைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் விளைதிறன்மிக்க சட்டகத்துக்குள் வழங்கப்படுவதனால் நிறுவனதிதன் அபாயங்களை இனங்காண்பதற்கு முகாமைத்துவத்துக்கு வழிவகுக்கின்றது. அவர்களின் உபாயமுறையிலான நோக்கு, நிறுவனத்தின் நிதி மற்றும் மனிதவளத்தை நிறுவனத்தின் நோக்கங்களை அடைந்துகொள்வதற்குப் பயன்படுத்தல் மற்றும் முகாமைத்துவத்தின் விளைதிறன்மிக்க கண்காணிப்பும் உறுதி செய்யப்படுகின்றது. மேலும் நிறுவனத்தின் பெறுமானங்கள் மற்றும் தரநியமங்களை தாபிப்பதற்கு மற்றும் பங்குதாரர்களின் மற்றும் ஏற்புடைய வேறு தரப்பினர்கள் தொடர்பில் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுவதும் உறுதி செய்யப்படும். பணிப்பாளர் சபைக்கு பொறுப்பளிக்கப்படுகின்ற விசேட பொறுப்புக்கள் பின்வருமாறாகும்.

- நிறுவனத்தின் நோக்கங்கள் வரவு செலவுத்திட்டம் மற்றும் எதிர்வுகூறல்களை தொடர்ச்சியாக பின்னாய்வு செய்தல்
- நடவடிக்கைசார் மற்றும் வெளிக்கள செயலாற்றுகையை பின்னாய்வு செய்தல்
- மூலதன முதலீட்டு வாய்ப்புக்களை இனங்காணல் மற்றும் முன்னோடியாக செயற்படுதல்
- விளைதிறன்மிக்க உள்ளகக் கட்டுப்பாட்டு முறையை தாபிப்பதை உறுதி செய்தல்
- மிக்க உயர் மட்ட நன்னெறிகள் மற்றும் சட்டபூர்வமானதன்மையை உறுதி செய்தல்
- வருடாந்த கணக்குகளை வெளியிடுவதற்கு அங்கீகாரம் பெற்றுக் கொடுத்தல்
- பங்குதாரர்களின் அங்கீகாரத்துக்கு வருடாந்த பங்கிலாபத்தை பிரேரித்தல்.

பணிப்பாளர் சபையானது தவிசாளர், திறைசேரியின் பிரதிநிதியான பணிப்பாளர் உள்ளடங்களாக நிறைவேற்றல்லாத பணிப்பாளர்கள் நான்கு போர் ம்றறும் ஒரு நிறைவேற்றுப் பணிப்பாளரை உள்ளடக்கியுள்ளது. அவர்களின் பெயர்கள் மற்றும் பதவிகள் கீழே தரப்பட்டுள்ளன.

பணிப்பாளர் சபை கூட்டங்கள்

கம்பனியின் முன்னேற்ற அறிக்கைகள் தொடர்ச்சியாக பணிப்பாளர் சபைக் கூட்டங்களின் போது ஆராயப்படுவதுடன், தரப்படுத்தப்பட்ட நிகழ்ச்சிநிரல் தேவையான சந்தர்ப்பங்களில் உரிய மேலதிக விடயங்களையும் உள்ளடக்கியதாக கலந்துரையாடப்படும். பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மாதம் ஒரு தடவை நடாத்தப்படுவதுடன், தேவையான சந்தர்ப்பங்களில் விசேட பணிப்பாளர் சபைக் கூட்டங்களும் நடாத்தப்படும். 2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டில் கம்பனி தகைமைவாய்ந்த அதிகாரியொருவரின் கீழ் நிருவகிக்கப்பட்டு வந்தது.

தகைமைவாய்ந்த அலுவலரின் பெயர்
எரிக் இளயப்பஆரச்சி

முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள்

நிறுவனத்தின் தவிசாளர், பொது முகாமையாளர் மற்றும் நிறுவனத்தின் உயர்மட்ட முகாமைத்துவத்துடன் ஆகக் குறைந்தது மாதம் ஒரு தடவை ஒரு கூட்டம் நடாத்தப்படுவதுடன், இதன் போது செயற்பாட்டு நடவடிக்கைகள் பற்றிக் கலந்துரையாடுதல் மற்றும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவதும் இடம்பெறும். பணிப்பாளர் சபையிடம் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் வியாபார ரீதியான தீர்மானங்கள் விரிவாக பகுப்பாய்வு செய்யப்படுவது மற்றும் அமுல்படுத்த வேண்டிய முறை பற்றிய ஆரம்ப தீர்மானங்களை மேற்கொள்வது முகாமைத்துவக் குழுவினூடாக மேற்கொள்ளப்படும்.

பணிப்பாளர் பதவிக் காலம், ஓய்வுறுத்தல் மற்றும் நியமனம் செய்துகொள்ளல்

ஒவ்வொரு வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் போதும் மூன்றில் ஒரு பங்கு எண்ணிக்கையான பணிப்பாளர்கள் ஓய்வுறுத்தப்படுவார்கள் என்பதுடன் (பணிப்பாளர்கள் மூன்றின் மடங்காக உள்ள பட்சத்தில் அண்மித்த மூன்றில் ஒன்றுக்கு) மீண்டும் தெரிவு செய்துகொள்வதும் மேற்கொள்ளப்படும். நிறுவனத்தின் யாப்புக்கு அமைய தெரிவு

செய்துகொள்ளப்படும் பணிப்பாளர் ஒருவர் அடுத்துவரும் வருடாந்த பொதுக் கூட்டத்தின் போது மீண்டும் நியமனம் செய்துகொள்ளப்படல் வேண்டும்.

கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள்

கணக்காய்வுக் குழு பிரதானமாக உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையை மீளாய்வு செய்வதுடன் நல்ல உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை நிறுவனத்தினுள் காணப்படுவதற்கு இது உதவியாக அமையும். கணக்காய்வு குழு நிறைவேற்று அல்லாத பணிப்பாளர்கள் மூன்று பேரை உள்ளடக்கியதாக இருக்கும் என்பதுடன், அதன் தவிசாளராக திறைசேரியை பிரதிநிதித்துவம் செய்யும் பணிப்பாளர் செயற்படுவார். கணக்காய்வுக் குழு தேவையான சந்தர்ப்பங்களில் உள்ளகக் கணக்காய்வாளர்கள், பொது முகாமையாளர் மற்றும் உயர் மட்ட முகாமைத்துவத்தின் உறுப்பினர்களை தமது கூட்டங்களில் பங்கேட்கச் செய்துகொள்ளும். கணக்காய்வு குழு தொடர்ச்சியாக உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள், மாதாந்த முன்னேற்ற அறிக்கைகள், விற்பனை அறிக்கைகள், முறைமை மற்றும் கட்டுப்பாடுகளை ஆராயும் என்பதுடன் தரத்தை மேம்படுத்திக் கொள்ளத் தேவையான சிபாரிசுகளும் பெற்றுக் கொடுக்கப்படும்.

கணக்காய்வுக் குழுக் கூட்டங்களில் பங்கேற்றல் - 2019

பணிப்பாளர்கள்		பங்குபற்றிய கூட்டங்களின் எண்ணிக்கை
திரு ஆர்.எம்.டி.கே.என். பண்டார	(தவிசாளர் - கணக்காய்வுக் குழு)	04
திரு எரிக் இளயப்பஆரச்சி	(தகைமைவாய்ந்த அதிகாரி)	04

உள்ளகக் கட்டுப்பாடு

கம்பனியின் பங்குதாரர்கள் எதிர்பார்க்கும் உயர் பயன்களைப் பெற்றுக் கொடுப்பதற்கும் நிறுவனத்தின் சொத்துக்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் தேவையான நல்ல உள்ளகக் கட்டுப்பாட்டு சூழலை உருவாக்கும் பொறுப்பை பணிப்பாளர் சபை கொண்டுள்ளது. நிறுவனத்தின் வியாபார அபாய அச்சுறுத்தலை விளைதிறன் மற்றும் தகுந்த முறையியலுக்கு அமைய மேற்கொள்ளத் தேவையான கட்டமைப்புக்களை உருவாக்குவது பணிப்பாளர் சபையின் கொள்கையாகும். நிறுவனம் முகம் கொடுக்கக்கூடிய அபாய அச்சுறுத்தல்களை இனங்காணல், மதிப்பீடு செய்தல் மற்றும் கண்காணிப்புச் செய்தல் மற்றும் தீர்வுகளை சிபாரிசு செய்வது பற்றிய பொறுப்பை பணிப்பாளர் சபை கணக்காய்வுக் குழுவிடம் பொறுப்பளித்துள்ளது.

நிதி அறிக்கைகளை சமர்ப்பிப்பதும், வெளிப்படைத்தன்மையும்

நிதி அறிக்கைகள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய தயார் செய்யப்பட்டுள்ளன. வெளிக் கணக்காய்வாளராக கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம் காணப்படுகின்றது. தேவையான சகல தகவல்கள் மற்றும் அறிக்கைகள் அனைத்தும் வழங்கப்பட்டுள்ளன. சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் அவர்களுக்கு தொழில்சார் சுதந்திரமாக கணக்காய்வு செய்வதற்கான சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் தமது கருத்துக்களை வெளியிடுவதற்கும் அவர்களுக்கு இயலுமாயிற்று.

அங்கீகரிக்கப்பட்ட நன்னெறிகள்

ஏற்றுக்கொள்ளத்தக்க நடத்தையின் அடிப்படையில் சகல ஊழியர்களுக்கும் வழிகாட்டுவதற்கு ஒழுக்கம் பற்றிய சட்டம் காணப்படுகின்றது. ஒழுக்காற்று விதிகளின் பிரதான அம்சங்களாவன,

- சகல செயற்பாடுகளிலும் நியாயத்தன்மை, நேர்மை மற்றும் பக்கச்சார்பற்ற தன்மை.
- சட்டங்கள் விதிகள் பற்றி அறிந்திருத்தல் மற்றும் அதற்கு இணங்கியொழுகுதல்.
- கொடுக்கல் வாங்கல் செய்யும் சகல விடயங்களினதும் இரகசியத்தன்மை.
- கம்பனிக்கு பாதகமானதாக வெளிப்படுத்தப்படுகின்ற அல்லது பாதிப்பை ஏற்படுத்த வாய்ப்புள்ள நடத்தைகளிலிருந்து தவிர்ந்துகொள்ளல்.

நியாயாதிக்க கொடுப்பனவுகள்

அரசுக்கு செலுத்த வேண்டிய சகல நியாயாதிக்க கொடுப்பனவுகளும் உரிய காலப்பகுதிக்குள்ளேயே செலுத்தி முடிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இற்கமைய ஓய்வூதியப் பணிக்கொடைக்கான ஏற்பாடுகள் ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளன.

நிதி அறிக்கைகளை சமர்ப்பிப்பதும், வெளிப்படைத்தன்மையும்

2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான கணக்குகள் பணிப்பாளர் சபையினால் ஆராயப்பட்டதுடன், நிறுவனத்தின் நடவடிக்கைகள் பற்றி உண்மையாகவும், நியாயமாகவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை தொடர்பில் திருப்தியுறுகின்றது. பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய கூற்று இக்கணக்குகள் கூற்றின் 19 ஆம் பகத்தில் தரப்பட்டுள்ளது.

தார்மீக நன்னெறிகள்

நல்லாட்சியின் ஒரு பகுதியாக ஊழியர்கள் உயர்மட்ட தார்மீக நடத்தையைப் பேணிவருவது அத்தியாவசியமாகும் என்று பணிப்பாளர்கள் நம்புகின்றனர் என்பதுடன், ஊழியர்கள் நியாயமாகவும், நிறுவனத்திற்கு பக்கச்சார்புடனும் செயற்படுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. சகல ஊழியர்களும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது வாடிக்கையாளர்கள், பங்குரிமையாளர்கள் மற்றும் சமுதாயத்தினருக்கு உச்சளவான சேவையை ஆற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது,

நியாயாதிக்க கொடுப்பனவுகள்

அரசுக்கு செலுத்த வேண்டிய சகல நியாயாதிக்க கொடுப்பனவுகளும் உரிய காலப்பகுதிக்குள்ளேயே செலுத்தி முடிக்கப்பட்டுள்ளதுடன், இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இற்கமைய (2006 இன் திருத்திய) ஊழியர் பயன்களுக்கு ஏற்பட ஓய்வூதியப் பணிக்கொடை வழங்கப்பட்டுள்ளது.

வகைப்பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படுத்தல்

2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடையும் ஆண்டுக்கான கணக்குகள் பணிப்பாளர் சபையினால் ஆராயப்பட்டதுடன், நிறுவனத்தின் நடவடிக்கைகள் பற்றி உண்மையாகவும், நியாயமாகவும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை தொடர்பில் திருப்தியுறுகின்றது. பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் பற்றிய கூற்று இக்கணக்குகள் கூற்றின் 19 ஆம் பகத்தில் தரப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைக்கு அமைய
பரந்தன் கெமிகல்ஸ் கம்பனி லிமிடட்

எச்.எல். விபுல சில்வா
பணிப்பாளர் சபை செயலாளர்

கணக்காய்வுக் குழு அறிக்கை

கணக்காய்வுக் குழுவின் செயற்பணி

கணக்காய்வுக் குழுவின் நிதி அறிக்கையிடல், கணக்காய்வு செயன்முறை மற்றும் நல்ல உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் அபாய முகாமைத்துவக் கட்டமைப்புக்கள், உள்ளகத் தொடர்புகள் பற்றி கற்றல் மற்றும் அதன் தரமான பண்புகள், குறைபாடுகள் மற்றும் தேவைகளை வளர்த்துக் கொள்வது பற்றி பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுவது கணக்காய்வுக் குழவின் பிரதான செயற்பணியாகும். கீழே குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் தொடர்பிலான கண்காணிப்பு மற்றும் பின்னாய்வும் கணக்காய்வுக் குழுவின் செயற்பணியில் உள்ளடங்கும்.

- நிதிக் கூற்றுக்களின் நம்பகத் தன்மை மற்றும் பூரணமான தன்மை
- உள்ளகக் கட்டுப்பாட்டின் போதியளவான தன்மை மற்றும் பூரணத்துவம்
- உள்ளக மற்றும் வெளிக் கணக்காய்வின் செயலாற்றுகைசார் விளைதிறன்
- நியாயாதிக்க மற்றும் சட்டரீதியாக ஏற்புடையதாதல்

கணக்காய்வுக் குழு

நிறைவேற்றல்லாத பணிப்பாளர்கள் மூவரைக் கொண்டதாக கணக்காய்வுக் குழு அமைந்துள்ளதுடன், திறைசேரியின் பிரதிநிதியான பணிப்பாளர் அதற்கு தலைமை தாங்குகின்றார். கணக்காய்வுக் குழு பின்வரும் பணிப்பாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது.

திரு ஆர்.எம்.டி.கே.என். பண்டார - கணக்காய்வுக் குழு தவிசாளர்
திரு எரிக் இளயப்பஆரச்சின - தகைமைவாய்ந்த அதிகாரி

கூட்டங்களும், பங்கேட்பும்

கணக்காய்வுக் குழு 2019 ஆம் ஆண்டுக்கு 04 கூட்டத்தொடர்களை நடாத்தியுள்ளதுடன், அதன் போது கலந்துரையாடப்பட்ட முக்கிய விடயங்கள் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடப்பட்டன. கணக்காய்வுக் குழுக் கூட்டங்களில் பங்கேற்பது பற்றிய தகவல்கள் நிறுவனத்தின் நல்லாட்சி பற்றிய அறிக்கையில் தரப்பட்டுள்ளது. கணக்காய்வுக் குழு தேவையான சந்தர்ப்பங்களில் உள்ளகக் கணக்காய்வாளர்கள், முகாமைத்துவ பணிப்பாளர் மற்றும் உயர் மட்ட முகாமைத்துவ உறுப்பினர்களை தமது கூட்டத்தில் பங்குபற்றச் செய்துள்ளது.

செயற்பணி

வரைவு கணக்குகளை ஆராய்தல், வெளிக் கணக்காய்வாளரின் அறிக்கை, உள்ளகக் கணக்காய்வாளரின் அறிக்கை, மாதாந்த முன்னேற்ற அறிக்கை, விற்பனை அறிக்கை மற்றும் மோசடி, தவறுகள் மற்றும் கைவிடப்பட்டமை போன்றதாக ஏற்படக்கூடியதான தவறுகள் தொடர்பில் கலந்துரையாடுவதன் மூலம் மற்றும் பின்னாய்வு செய்வதன் மூலம் கணக்காய்வுக் குழு பெறுமதிமிக்க செயற்பணியை நிறுவனம் சார்பாக நிறைவேற்றுகின்றது. அபாய அச்சுறுத்தல்களை குறைப்பதற்கு மற்றும் முறைமையை மென்மேலும் வலுவூட்டி மோசடி, தவறுகள் மற்றும் குறைபாடுகள் இடம்பெறுவதற்குள்ள வாய்ப்புக்கள் முடிந்தளவு குறைக்கப்படுகின்றன.

உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை

2019 ஆம் ஆண்டு குழுவினால் உள்ளகக் கணக்காய்வாளர்களான, M/S ஜயதிலக்க என்ட் கம்பனி, பட்டயம் பெற்ற கணக்காளர்களினால் மேற்கொள்ளப்படட் கணக்காய்வின் பெறுபேறுகள் மீளாய்வு செய்யப்பட்டன. உள்ளகக் கணக்காய்வாளர் (2014 ஆம் ஆண்டுக்கு) சமர்ப்பித்த எந்தவொரு சிபாரிசையும் அமுல்படுத்துவது உட்பட எழுப்பப்பட்ட விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பதில் நடவடிக்கைகளின் போதியளவான தன்மை கவனத்தில் கொள்ளப்பட்டது.

இணங்கியொழுகுதல்

கணக்காய்வுக் குழவானது, நியாயாதிக்க ஒதுக்கங்கள் மற்றும் கொடுப்பனவுகளின் ஏற்புடையதானதன்மை மற்றும் நம்பகமான இற்றைப்படுத்தப்பட்ட நிதிசார் தகவல்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம், அரச தொழில்முயற்சிகள் திணைக்களத்தின் விதிகள், அரச வளங்கள் மற்றும் தொழில்முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சு, பெறுகை விதிகள் மற்றும் அரசாங்க சுற்றறிக்கைகளுக்கு அமைய மேற்கொள்வதற்கு பெரும் பங்களிப்பை பணிப்பாளர் சபைக்கு வழங்கியது.

கணக்காய்வுக் குழு சார்பாக,

ஆர்.எம்.பி.கே.என். பண்டார
உறுப்பினர் - கணக்காய்வுக் குழு

எரிக் இளயப்பஆரச்சி
உறுப்பினர் - கணக்காய்வுக் குழு

2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான பிரதான நிதிசார் சந்தர்ப்பங்களை உள்ளடக்கிய ஐந்து வருட பொழிப்பு

	2019 ரூபா	2018 ரூபா	2017 ரூபா	2016 ரூபா	2015 ரூபா
வருமானம்	287,168,845	302,627,105	334,330,049	257,567,095	219,215,292
விற்பனை செலவினம்	(151,904,349)	(157,924,310)	(146,351,617)	(121,547,124)	(115,416,329)
மொத்த இலாபம்	135,264,496	144,702,795	169,978,432	136,019,971	103,798,964
ஏனைய செயற்பாட்டு வருமானங்கள்	38,477,530	33,279,066	28,576,511	19,875,872	12,742,890
	173,742,026	177,981,861	198,554,944	155,895,543	116,541,854
விற்பனை மற்றும் விநியோக செலவினம்	(1,494,595)	(1,066,646)	(1,379,430)	(74,207)	(1,183,475)
நிருவாக மற்றும் தாபன செலவினம்	(98,614,771)	(102,402,002)	(97,143,590)	(93,983,932)	(96,403,296)
நிதிசார் செலவினம்	(251,933)	(249,297)	(132,586)	(134,915)	(750,671)
வரிக்கு முந்திய இலாபம்	73,380,727	74,263,916	99,899,337	61,029,489	18,204,412
வரி அறிவிடல்	(30,192,565)	(14,390,221)	(25,405,403)	(11,242,218)	(8,907,040)
காலப்பகுதிக்கான தேறிய இலாபம்	43,188,162	59,873,695	74,493,934	49,787,271	9,297,372
பங்குதாரர்களுக்கு செலுத்திய பங்கிலாபம்	3,000,000	10,000,000	11,000,000	7,000,000	1,300,000
சொத்துக்கள்					
நடைமுறையல்லாத சொத்துக்கள்					
ஆதனம், பொறி, உபகரணம்	288,300,442	277,034,696	295,358,631	291,162,747	302,704,501
மேற்கொண்டுவரும் வேலைகள்	7,994,545	17,156,866	7,705,010	6,006,192	6,043,702
நடைமுறை சொத்துக்கள்	497,595,389	428,844,185	378,048,948	298,183,249	234,487,883
மொத்த சொத்துக்கள்	793,890,376	723,035,747	681,112,590	595,352,188	543,236,126
உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்					
மூலதனமும், திரட்டும்					
வெளியிடப்பட்ட மூலதனம்	40,000,000	40,000,000	40,000,000	108,500,000	108,500,000
தடுத்துவைக்கப்பட்ட இலாபம்	622,160,262	578,566,390	529,697,079	464,899,318	344,501,031
பங்குதாரர்களின் நிதியம்	662,160,262	618,566,390	569,697,079	504,899,318	453,001,031
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்	72,119,865	55,068,753	51,205,107	45,440,962	46,771,152
நடைமுறை பொறுப்புக்கள்	59,610,248	49,400,604	60,210,404	45,011,908	43,463,943
உரிமையாண்மை மற்றும் பொறுப்புக்கள்	793,890,376	723,035,747	681,112,590	595,352,188	543,236,126

கூட்டம் பற்றிய அறிவித்தல்

கம்பனியின் 29 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம், 2022 மார்ச் மாதம் 28 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு, இரத்மலானை, காலி வீதி, இலக்கம் 446 எனும் முகவரியில் அமைந்துள்ள பரந்தன் கெமிகல்ஸ் கம்பனி லிமிடட் நிறுவன தலைமை அலுவலகத்தில் நடைபெறும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது.

நிகழ்ச்சிநிரல்

1. 2019 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் நிறைவடைந்த ஆண்டுக்கான கம்பனி பணிப்பாளர்களின் அறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளை சமர்ப்பித்தல் மற்றும் அது தொடர்பிலான கணக்காய்வாளர்களின் அறிக்கையை சமர்ப்பித்தல்.
2. பணிப்பாளர்களின் சிபாரிசு செய்யப்பட்டுள்ளவாறு பங்கிலாபத்தை பிரகடனம் செய்தல்.
3. கம்பனி யாப்பின் 87 மற்றும் 88 ஆம் பிரிவுகளுக்கு அமைய பணிப்பாளர்கள் இருவரை மீண்டும் தெரிவு செய்துகொள்ளல்.

சபையின் கட்டளையின் பிரகாரம்,

எச்.எல். விபுல சில்வா
செயலாளர்,
2022 மார்ச் 02.

குறிப்பு :

1. கூட்டத்தில் பங்குபற்றி வாக்களிப்பதற்கு உரிமை பெறும் உறுப்பினர் ஒருவருக்கு, அவர் சார்பாக பங்கேற்று வாக்களிக்க ஆளொருவரை நியமனம் செய்ய உரிமை உண்டு.
2. பதிலாள் ஒருவர் கம்பனியின் உறுப்பினராக இருப்பது அவசியமற்றது.
3. பதிலாள் மாதிரிப்படிவம் இந்த அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது.